யாழ்ப்பாணத்தின்

# மிஷின் சரித்திரம்.

---

A

BRIEF

# HISTORY OF MISSIONS

IN

JAFFNA

---

Nathaniel Niles

## PART. I.

---

பானிப்பாய்

இரிப்பிளி ஸ்திரோங்கென்பவர்களுடையயந்திரசாலையிற் பதிக்கப்பட்டது.

௲அகூ௫

BV2550
.N55
1865

Th

## RECOMMENDATIONS.

I consider Mr. Niles as better qualified, by age, by talent, and by a personal knowledge of facts from the beginning, to prepare such a work than any other man I know.

LEVI SPAULDING.

Oct. 28th, 1864.

---

Such a book would be of great value to present and future generations, and I know of no one so well qualified to prepare it as Mr. Niles is. I am glad to know that he has entered upon the work and hope he will meet with encouragement and success.

W. W. HOWLAND.

Batticotta, Nov. 1st, 1864.

---

I am thankful, if the calling upon Mr. Niles briefly to review the last fifty years of the history of Jaffna at one of our religious anniversaries, has led him to undertake the preparation of a more full account of the said period. The materials for such a history are abundant and of such a character as to impart special interest to the work. I consider Mr. Niles peculiarly qualified to prepare such a book and hope that he may meet with every encouragement necessary to the success of the enterprize.

M. D. SANDERS.

Batticotta, Nov. 2nd, 1864.

I wish Mr. Niles every possible success in his very praise-worthy effort to place within the reach of the Tamil Church a narrative of the three Protestant Missions, which have so persistently carried on their operations in Jaffna The experience and general qualifications of Mr. Niles lead me to hope that his work will be very well done. This is an enterprise in which our Tamil Christians should evince a hearty concern.

JOHN KILNER.

Jaffna, November 24th, 1864.

---

I heartily wish Mr. Niles success with so important and interesting a work as he proposes to write, and I shall be glad to hear that the educated and well-to-do young men of Jaffna will give the undertaking their support.

C. C. MC'ARTHUR.

Jaffna, November 24th, 1864.

---

Recommendation by W. Nevins, Esq.

A History of the rise, progress and results of the three Protestant Christian Missions of Jaffna, in the nineteenth century, is in fact a prominent element of the history of the people of Jaffna. Men better acquainted with the prin-

ciples of Socialogy and Ethology, and better qualified for accurate observation and sound deduction, fail not to remark that the present improved condition in society and character of the people owes its origin mainly to the labours of these Missions. The writer of the history of these Missions has long been a faithful laborer in connection with one of the missions and we believe is well qualified for so noble an attempt as the one he has undertaken. May his little contribution be crowned with usefulness and may he receive from his Master a higher plaudit, "Well done good and faithful servant." are the sincere wishes of his friend.

WILLIAM NEVINS.

Batticotta, May 29 th, 1865.

---

## அங்கிகாரபத்திரம்.

### இப்புத்தகம் எழுதுவது உத்தமமென்றுவிரும்புங் குருமாரிற் பின்வரும் பெயர்வழிக்காரர் சொல்லுகிறதாவது.

*கனம்பொருந்திய ஸ்போல்டிங் ஐயர் சொல்லுகிறதாவது; இப்பிரபந்தத்தை எழுத நயில்சுப்பிரசங்கியாரைப் போலக் காலத்தினாலும் வரத்தினாலும் மிசியோன் ஆதிசரித்திர வரலாறுகளினறிவினாலுந்திறமையுடைய வேறொருவரை நான் அறிந்திலேன்.*

*௲௮௱௬௰௫ம் ஆண்டு ஐப்பசி மாதம் ௨௮ந் தேதி.*

கவுலன் ஐயர் சொல்லுகிறதாவது இப்படிப்பட்ட ஒருபுத்தகம் தற்காலத்தாருக்கும் பிற்காலத்தாருக்கும் மிக உபயோகமாயிருக்கும். நயில்சுப்பிரசங்கியாரைப்போல இதையெழுத நற்திறமையுள்ள வேறொருவரை அறியேன். அவரிப்படிச்செய்யத் தொடங்கி இருக்கிறார் என்பதை அறிந்து சந்தோஷப்பட்டேன். இதுகாரியத்திலே தயிரியப்படுத்தப்பட்டுக் காரியசித்தியடைவாரென்றும் நம்புகிறேன்.

வட்டுக்கோட்டை ௲௮௱௫௰ம் ஆண்டு கார்த்திகைமாதம்.

---

சாந்தர்ஸ் ஐயர் சொல்லுகிறது, மிசியோனின் ஐம்பது வருடச் சரித்திரத்தைச் சுருக்கமாக எங்கள் வருடாந்தக்கூட்டமொன்றில் அறிவிக்கும்படி நயில்சுப்பிரசங்கியாரிடங்கேட்டுக்கொண்டகேள்வி, ஒருவிரிவான புத்தகத்தை எழுத அவரை ஏவினதினால் அதற்கு நான் நன்றியறிதல் சொல்லுகிறேன். அப்படிப்பட்ட புத்தகத்துக்கு மிகவும் விரும்பப்படத்தக்க மதிப்பைக் கொடுப்பதற்கேற்ற உபகரணங்களும் அநேகம் இருக்கின்றன. அந்தப் புத்தகத்தை எழுத நயில்சுப்பிரசங்கியாரே மிகவும் தகுமானவரென்றும் அவர் கையிட்டுக்கொண்ட காரியம் சித்தியாகும்படி தேவ்வையான உதவிகளும் வாய்க்குமென்றும் நம்புகிறேன்.

வட்டுக்கோட்டை, ௲௮௱௫௰ம் ஆண்டு கார்த்திகை மாதம் ௨௩ தேதி.

இல்லர் ஐயர் சொல்வது யாழ்ப்பாணத்தில் மூன்று புரோற்றெஸத்தன் மிஷன்களும் தங்கள் கிருத்தியங்களை விடாமுயற்சியாய் நடப்பித்துவந்த வரலாற்றின் சங்கதியை கிறிஸ்த தமிழ்சபைக்கு உபயோகமாக்கும்பொருட்டு நயில்சுப்பிரசங்கியார் எடுத்துக்கொண்ட இந்த நன்முயற்சி சித்தியாகவேண்டும் என்பதே நமது விருப்பம். அவரிடத்துள்ள அறிவு பரிட்சைசாமார்த்தியம் முதலியனவற்றைப் பார்க்குமிடத்து அவர் இச்சரித்திரத்தை நன்குமுடிப்பாரென்று நான் நம்பவேண்டியிருக்கிறது. இத்தேசத்துக் கிறிஸதவர்கள் யாவரும் இது தங்கள்காரியமென்று அங்கிகரிக்கவேண்டிய ஒருமுயற்சி.

௲௮௬௪ம் ஆண்டு கார்த்திகை மாதம் ௨௪ந் தேதி.

---

மெய்க்காதர் ஐயர் சொல்லியது. நயில்சுப்பிரசங்கியார் எழுதும்படி கையிட்டுக்கொண்ட முக்கியமானதும் மிக நயப்பானதுமான இந்தச் சரித்திரம் அனுகூலப்ட்டவேணுமென்பதே எனது பெரியவிருப்பம். படிப்பிக்கப்பட்டவர்களும் சுயதேச நன்மையை விரும்பியவர்களுமாகிய யாழ்ப்பாணத்தார் சகலரும் இத்தொடக்கத்திற்கு உதவிசெய்பக்காண்பது சந்தோஷம்.

௲௮௬௪ம் ஆண்டு கார்த்திகை மாதம் ௨௪ந் தேதி.

# PREFACE.

The numerous aspirants after knowledge of the present generation, who devote time to the reading of treatises on elementary science, literature, history and other kindred subjects either in the vernacular or a foreign language are not in possession of any treatise on the past history of Jaffna. Ignorance of the past condition of Jaffna as compared with the vast improvement effected by the establishment of Protestant Missions in connection with the British rule, will certainly be considered a deficiency. Though *we* possess some general information on this subject, those of the succeeding generations will desire some definite narration of facts in answer to queries similar to the following; When did the Portuguese take possession of Jaffna or Ceylon, and how long did they rule? By whom was it possessed before them? Who succeeded them, and what were the principal events of these different periods? Who were the first Missionaries? When did the Wesleyan, Church, and American Missions commence Missionary operations in Jaffna, and what are the principal events connected with them? Answers to such inquiries are not known to many even now; and the means of ascertaining them are not within the reach of such. An attempt is made to furnish some permanent and reliable record of facts, in the following pages.

The writer would gratefully acknowledge

his indebtedness to several friends for the encouragement which they have afforded by subscription towards the cost of printing this work. H. Pole Esq. and other gentlemen among the Civilians, the Rev. L. Spaulding and others of the Missionary gentlemen and ladies, and many native friends, especially those who were educated in the late Batticotta Seminary and who are now in public offices in Courts, Kutcheries, Custom Houses, Hospitals and other places of trust, and those who are laboring for the welfare of the country as teachers and disseminators of the Gospel Truth, have encouraged the author by their subscriptions.

The style of the following book may perhaps be regarded by some to be too simple, but it is to be borne in mind by such, that it is intended to be adapted to the capacity of even children and females as well as to those to whom the language is not vernacular. It is not presumed that the work is free from errors, but it is believed that the learned portion of the readers will not, on that account, reject the work but will oblige the author by communicating such errors, as they may find, to him.

That the work may prove a source of instruction to the readers by the blessing of God is the earnest desire of the author.

# பாயிரம்.

சாத்திரங்கள், இலக்கணஇலக்கியங்கள், பிறபாஷைச் சரித்திரங்கள் முதலானவைகளைக் கற்றறிந்துவரும் நமது தேசத்தார் கிறிஸ்துமார்க்கப் போதகர் பிறதேசங்களில் இருந்துவந்து படிப்பித்துப் போதிப்பதற்கு முதலிருந்த சீர் நிருபாகத்தையும் பின்பு உண்டான சீர்திருத்தத்தையும் கல்வித் தேற்றத்தையும் மார்க்கவிருத்தியையுமடிவாருக அறியாதிருக்கின் அது பெரிய குறையல்லவா. உங்கள் புத்திரர் மித்திரரும் பின் வருஞ் சந்ததியாரும் உங்களை நோக்கி, யாழ்ப்பாண ஆதிசரித்திரம் என்னவென்றுகேட்டால் அவர்களுக்கு என்ன சொல்வீர்கள். இப்பொழுதுஞ் சிலருக்கு யாழ்ப்பாண ஆதிசரித்திரம் இன்னதென்று தெரியாதே. திருட்டாந்தமாகப் போர்த்துக்கேசர் யாழ்ப்பாணத்துக்கு வந்ததெப்போ? எத்தனை வருடம் அரசுபுரிந்தார்கள்? அதற்குமுன் அரசுசெய்த இராசாவார்? அதற்குப் பின்வந்த உலாந்தாக்காறர், இங்கிலீசுகாரர் எப்பொழுது வந்தார்கள்? உலாந்தாக்காரர் காலத்தில் நடந்தவைகள்இன்னின்னவென்பன துலாம்பரமாய்த் தெரியாதே. மேலும் உவெசிலியன், அமரிக்கன், சர்ச்சுமிசியோன் போதகரில் முதன்முதல் வந்தவர்கள் ஆரென்றும், நடந்த ஆதி சரித்திரங்கள் இன்னின்னவென்றும் சிலருக்குமாத்திரம் தெரியும். தெரியாதிருப்பது எங்கள் குற்றமல்லக் குருமார் வந்தகாலந் தொடங்கி அவர்களுடன் சரித்துவந்தவர்களாகிய உங்களுடைய குற்றம். அச்சரித்திரங்களையெழுதி ஏன் அச்சடிப்பித்து எங்களுக்குப்பிரசுரஞ்செய்யவில்லை என்பீர்களாகுகும். ஆகையால் இச்சரித்திரங்கள் இங்கிலீசுப்பாஷையில் பற்பலவிடங்களிலும் சொல்லப்பட்டிருந்தும் சாதாரணசனங்களும் வாசித்தறியத் தமிழிலே அவற்றை விபரமாயெழுதி அச்சடிப்பிப்பது அவசியமே.

இதற்குப் பணமில்லாததினால் தருமத்துரையாகிய

பேரல்துரையவர்களும் மற்றுந்துரைமாரும் சங்கைபோர்த ஸ்போல்டிங் ஐயர் முதலான குருமாரும் அம்மாள்மாரும் பரோபகாரிகளாகிய தமிழ்ச்சிநேகிதரும் விசேஷமாக வட்டுக்கோட்டைச் சாத்திரப்பள்ளிக்கூடத்திற் படித்து அங்கங்கே நியாயஸ்தலங்களிலும் ஆசுபத்திரியிலும் தெரு உத்தியோகத்திலும் அச்சுக்கூடத்திலும் பள்ளிக்கூடங்களிலும் உபதேசித்தொழிலிலும் நிற்கும் கலைவல்லோர் தருமசீலர் முதலான பலரும் கையெழுத்துப்போட்டுப் பணமும் சிலர் மனப்பூர்த்தியாகத் தந்தும் மற்றவர்கள் புத்தகம் அச்சடிப்பிக்கத்தொடங்கினவுடன் தருவோமென்றும் தயிரியப்படுத்தினதினால் இவ்விதிகாசத்தை எழுதி அச்சடிப்பிக்கமுயன்றோம்.

இச்சரித்திரத்தை வாசிக்கும் நிபுணர்கள் இதுதானு சரித்திரம் வெளிப்படையாகவும் புன்சொல்லாகவும் இருக்கிறதென்று நகையார்களாக.

இது பாலரும் பெண்பேதையரும் பிறபாஷைக்காரரும் வாசிக்கவேண்டியதாய் இருக்கிறபடியால் புதைபொருளாக எழுதப்படாதென்று நமது கையொப்பக்காரரில் சரீரக்கூறுபாடுகள் எல்லாவற்றையும் மனிதஎன்பு எத்தனை நரம்பு எத்தனை மூளையின்தன்மையென்ன நாடியோட்டமென்ன என்பதையும்மற்றுஞ்சாத்திரங்கள்கல்விகளையுமறிந்த ஒருநிபுணர் சொன்னசொற்படிஎழுதினேன். இதில் பிழைகளேதும் இருந்தால் அதை எனது அறிவாளிகளாகிய சிநேகிதர் பொறுத்துக்கொண்டு திருத்திவாசிப்பார்களாக. எதினாலெனில் என்னுடன் பரதாபங்கொள்ளுகில் அறிவாளிகளேயன்றி மூடர் அப்படிச்செய்யார்கள். ஏனென்றால் அறிவாளிகள்தாங்கள் ஒருநூலுண்டுபண்ணுவதில்எத்தனைதவறு வருமென்றும் எவ்வளவு பிரயாசமென்றுமறிவார்கள்.

## யாழ்ப்பாணத்தின் பூருவசங் கதிகளின் பொழிப்பு.

கவிவீரராகவனென்னும் ஓர் யாழ்ப்பாணன் சோழமண்டலத்தில் இருந்து கண்டியிராசன் பேரிற் பிரபந்தம் பாடி வந்து அரங்கேற்றியபொழுது அவ்வரசன் அவ்வியாழ்ப்பாணன்மேற் சந்தோஷங்கொண்டு மணற்காடென்னும் பெயர்பெற்றுக் கிடந்த இந்நாட்டைப் பரிசாகக் கொடுக்க இந்நாட்டுக்குத் தனது தொழிற்பெயர்க் காரணத்தால் யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டுத் தன்னுடன் சோழமண்டலத்திலிருந்து வந்த சனங்களையும் இவ்விடத்தில் இருந்த புத்தசமயத்தவர்களையும் அரசாண்டு வந்தான். அவன் பலவருஷங்களாக அரசாட்சிசெய்து மரணமடைந்த பின்பு யாழ்ப்பாணநாட்டை அரசாட்சிசெய்ய இராசனின்றி அரசாட்சி தளம்புவதைக்கண்டு பாண்டி மழுவனென்னும் ஓர் வேளாளன் மதுரையிற்சென்று அந்நாட்டை அரசாண்டிருந்த பாண்டிவம்மிசத்தரசனாகிய குலகேதுமகாராசனைப் பணிந்து யாழ்ப்பாணத்தை அரசாள்வதற்கு அரசனையும் சிலகுடிகளையும் தரவேணுமென்று கேட்டான். அவ்வரசன் அப்

பொழுதுதன்கீழ் இராச உத்தியோகத்துக்கு த்தகுந்தவர்களாகத் தான் வளர்த்துவந்த பதினெரு இராசகுமாரரையும் காட்டி இவர்களுக்குள் உனக்குச் சம்மதமான ஒருவனைத் தெரிந்துகொள்ளென்றார். அப்பொழுது அவன் இராச இலட்சணங்கள் அனைத்தும் நிறைந்த சிங்கையாரியன் என்னும் இராசகுமாரனைத் தெரிந்துகொண்டு மதுரை, பாளயங்கோட்டை, திருநெல்வேலி, மணவைநகர் முதலிய இடங்களில் இருந்து அரசனுற் கொடுக்கப்பட்ட சிலகுடிகளையுஞ்சேர்த்துச் சிங்கையாரியமகாராசனுடனே யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தான். சிங்கையாரிய இராசன் கூழங்கையுடையனுதலால் விசையகூழங்கைச்சக்கரவர்த்தியென்னும் பெயர்பெற்ருன். சிங்கையாரியமகராசன் புவனேகவாகு என்னும் மந்திரியுடனே வந்திறங்கி நல்லூர் என்னும் ஊரிலே கோட்டை கோத்தளங்களைக் கட்டுவித்து நீதியாய் அரசாட்சிசெய்து மரணமடைந்தான்.

அதன்பின் அவன் வம்மிசத்தார் ஆரியசக்கரவர்த்திகளென்னும் பெயர்படைத்து அரசாண்டிறந்தார்கள். அச்சக்கரவர்த்திகள் புத்தசமயத்தவர்களை ஒடுக்கிவந்

ததனாற் புத்தர்கள் இக்காட்டை விட்டுக் கண்டிமுதலிய இடங்களுக்குப் போய் ஒதுங்கிவிட்டார்கள். நான்காந் தலைமுறை அரசனாகிய பரராசசேகரனுக்குச் சொந்த மனைவி பெற்ற இரண்டு புத்திரரும் அரசகேசரியென்னும் வேளாளன் மகள் வள்ளியம்மை என்னும் வைப்பாடிச்சி பெற்ற பரநிருபசிங்கம் முதலிய நான்குபிள்ளைகளும் மணவைநகர் மங்கத்தம்மாள்பெற்ற சங்கிலியென்னும் குமாரனும் இருந்தார்கள். இராசாவின் சொந்த மனைவிபெற்ற மூத்தகுமாரனைச் சங்கிலியென்பவன் நஞ்சிட்டுக்கொன்றான். இளையமகனாகிய பண்டாரம் என்பவனே பட்டத்துக்கு வருவான் என்று எவர்களும் நம்பியிருந்த காலத்தில் ஒருநாள் அவனையும் வாளினாற் கொலைசெய்து சங்கிலியென்பவன் அரசாட்சியை ஒப்புக்கொண்டான். இனிப் பரநிருபசிங்கம் என்னும் பிள்ளை இராச்சியந் தனக்கே உரியதென்று கலகந்தொடங்கியதாற் சங்கிலியென்பவன் அவரைத் தன் வாய்ச்சாமர்த்தியத்தினால் வசப்படுத்தி மந்திரியாகவைத்துக்கொண்டு இராச்சிய வருமானத்திற் பாதி சரிவரக் கொடுத்துவந்தான். சிலகாலத்திலே சங்

கிலியேன்பவன் பேலத்துக்கோண்டு பர நிருபசிங்கத்துக்கு பரராசசேகரன் கோடுத்த சிலகிராமங்களையன்றி மற்றுஞ் சலாக்கியங்களையெல்லாங் கோடாமல் நிறுத்தினன். சங்கிலிக்குச் சோழராசன் இறுத்துவந்த இறையைப் பரநிருபசிங்கந் தடுத்தார். இப்படி இவர்கள் மனநேரிவுகொண்டிருந்த காலத்தில் தனது பிரசைகள் மன்னரிலே உரோமான் மார்க்கத்திற் சேர்ந்தார்களேன்ற நியாயத்தினலே சங்கிலியேன்பவன் கூகூாஉஎம் ஆண்டு அறுநூறு பேரைக் கோலைசெய்தான். பின்பு சவேரியாரேன்னும் போர்த்துக்கீசுகாரன் தன் சாதியாரான பறங்கிக்காரரைச் சங்கிலியேன்பவனுடனே சந்தோஷமாக்கிவைத்தான். அவர்கள் வியாபாரம்பண்ணிவந்த காலத்தில் சில கலகஞ் செய்ததினல் அவர்களை அவ்வரசன் துரத்திவிட்டான். அதன்பின்பு பரநிருபசிங்கமும் காக்கையவன்னியனுஞ்செய்த உபாயத்தால் மறுபடியும் பறங்கிக்காரர் அரசனுடனே சமாதானமாகிச் சிலகாலத்தின்பின் பகைகோண்டு மேற்குக் கோட்டை வாசலிலே பதினெரு நாளாகப் போராடிப் பறங்கிக்காரரால் ஆற்றுமற் பின்னிட்டார்கள். பின்னி

ட்ட பறங்கிக்காரரை மறுநாளும் போர் முனையில் வரச்செய்து பரநிருபசிங்கம் சேனுபதியை உபாயமாகப் புறப்படுத்தி ச்சேனுவீரரை ஆயுதம் எடாமல் தடுத்துநி ற்கக் காக்கைவன்னியன் அரசனைப் ப றங்கிக்காரர்கையில் ஒப்புக்கொடுத்தான். பறங்கிக்காரர் ௲௫௱௲௯ம் ஆண்டு தொட ங்கி நூற்றிருபது வருடக்காலம் இராச்சி யம்பண்ணினுர்கள். அப்பொழுதே யாழ் ப்பாணத்தில் உரோமைமார்க்கந் தலைப் படத்தொடங்கிற்று. பின்பு பறங்கிக்கா ரர் நடன சங்கீத விநோதராயிருந்த சமய த்திலே ஒருநாள் உலாந்தாக்காரர் காத்தி ராத வேளையிற் புகுந்து கோட்டையை ஒப்புக்கொண்டு நாற்பது வருடங் கிறிஸ் துமார்க்கத்தைப் பரப்பி அரசாண்டார்கள். ௲௭௱௯௫ம் ஆண்டு இங்கிலீசுகாரர் கோட் டையை ஒப்புக்கொண்டு இதுவரைக்கு ம் நீதியாக அரசாண்டுவருகிறுர்கள். இவ ர்கள் வந்தபிறகு உவெசிலியன்குருமாரிற் சிலரும் பாலன்பாதிரியாரும் தாவீதுப் பாதிரியாரும் அமரிக்கன் குருமார் வரச் சிறிதுகாலத்துக்குமுதல் யாழ்ப்பாணத்து க்கு வந்து சுவிசேஷத்தைப் போதித்துக் கொண்டுவந்தார்கள். பின்புதான் அமரி

க்கன் குருமாரிற் பூரையர் மேக்ஸ்ஜ
யர் முதலானவர்கள் வரத்தொடங்கினர்க
ள். இதன்சங்கதி பின்னுற்காண்க.

---

# யாழ்ப்பாணத்தின் மிஷன் சரித்திரம்.

## க. அதிகாரம்.

*அமரிக்கன் மிசியோனைப் பற்றி.*

### கம் பிரிவு.

குருமார் கொழும்பில் வந்திருந்த காலத்தில் அவர்களைப்பற்றிய சரித்திரம்.

௲அ௱௰௫ ம் ஆண்டு ஐப்பசி மாதம் உ௩ தேதி கனம்பொருந்திய உவாறன், இறீச்சேட், மேக்ஸ், பூரையர் என்னுங் குருமார்நால்வரும் அமரிக்காதேசத்தில் (Boston) என்னும் இடத்திலிருந்து கப்பலேறி ஐந்துமாதம் சமுத்திரப் பிரயாணம்பண்ணி ௲அ௱௰௬ ம் ஆண்டு பங்குனி மாதம் உ௩ தேதி கொழும்பிலே வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வந்தசமாசாரத்தைச் சாற்றர் என்னும் ஒருகுருவானவரும் அக்காலத்திற் றேசாதிபதியாயிருந்த விறவுன்னிறிக் மகாராசாவும் அறிந்து அவர்கள் சுவிசேஷக்குருக்களானதினால் மிகப்பட்சங்காண்பித்து அவர்கள் வாசம்பண்ண வீடும் வசதிபண்ணிக் கொடுப்பித்தார்கள். அக்காலத்தில் அந்தந்தத் தருணங்களில் குருமார் அங்கங்கே பிரசங்கம்பண்ணிக்கொண்டு வந்

தார்கள். இவர்கள் மனைவியரோ இங்கிலிசுகாறருடைய பிள்ளைகளைப் படிப்பித்தார்கள். அக்காலத்தில் இரண்டு சோல்தாதுமார் இவர்களுடைய சபைக்குச் சேர்ந்தார்கள். இவர்கள் இவ்விதமாக ஆறுமாதக் காலமாய்க் கொழும்பிலே இருந்துவருங் காலத்தில் சங்கைபொருந்த குருவாகிய தாவீத் பாதிரியாரும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் போயிருந்தார். அவ்வேளையில் இந்த ஐயமார் இவருடனே பழக்கமாகி யாழ்ப்பாணத்தைப்பற்றிப் பலபலகாரியங்களையும் விசாரித்து அறிந்து பின்பு யாழ்ப்பாணத்திலே தாங்கள் குருமாராக வந்திருக்க விரும்பி மகாராசா அவர்களிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு ௲௮௱௰௬ ம் ஆண்டு புரட்டாதி மாதம் யாழ்ப்பாணப்பட்டினத்திலே வந்துசேர்ந்தார்கள்.

௨. பூரையரும், உவாறன் ஐயரும் யாழ்ப்பாணப் பட்டினத்தைவிட்டுத் தெல்லிப்பழைக்கு வந்த பின் நடந்தசரித்திரம்.

இவர்கள் பட்டினத்திலே மோயாடுத்துத்துரை வீட்டில் சிறிது நாள் இருந்து பின்பு காங்கேசன் துறைக்கு வந்து அவ்விடத்தில் ஒரு மாலிலே சிறிது நாளிருந்து

பின்பு ௲௭௱௰௪ம் ஆண்டு ஐப்பசி மாதம் ௨௰ந் தேதி தேல்லிப்பழைக்கு வந்தார்கள். அக்காலத்திலே தேல்லிப்பழைக் கோவில் பாழ்பட்டதாயிருந்தது அதிலே பேயிருக்கிறதேன்று பயந்து சனங்கள் போகிறதில்லை. ஐயமார் அவ்விடத்துக்கு வந்து மண்டலநாயகமுதலியார் மாப்பாணமுதலியார் தில்லைநாயகமுதலியார் முதலான போதிய மனிதருடனே பழக்கமாகி வீடுங் கட்டுவித்துக்கோண்டு இரண்டோருமாதக் காலங்களுக்குள்ளே இருபது பிள்ளைகள் அளவுக்குப் படிப்பிக்கத் தோடங்கினார்கள். அவ்வேளையிலே வேதவாக்கியங்களைப் பிள்ளைகள் ஒலையில் எழுதிப் படித்துப் பாடஞ் சோல்லிவந்தார்கள். இந்த ஐயமார் இரண்டுபேருந் துன்பக்காறியாயிருந்த ஒரு எளிய ஸ்திரியினுடைய வீட்டுக்குப் போனபோழுது அவள் வீட்டில் தாழ்வாரத்திலே வேதவாக்கியம் எழுதப்பட்ட ஒலையோன்றைக் கண்டு விசாரித்த வேளையில் இவளுடைய ஒரு சிறுவன் படிக்கப்போன மற்றப்பிள்ளைகளுடைய எட்டைப்பார்த்து எழுதினதாகக் காணப்பட்டது. பின்பு இவனை ஐயமார் சாப்பாடு வஸ்திரங் கோடுத்துத் தாபரிக்கவிரும்பினார்கள். சனங்க

ளோ குருமாரை அன்னியரைப்போல நி
னைத்து அவர்களுடனே கொண்டாட்டம்
பண்ணப் பயந்திருந்தும் உவாறன் பாதிரி
யார் ஒரு வைத்தியருமாயிருந்ததினால் அ
நேக துன்பக்காறர் அவரிடதித்லே வந்து
சுகமடைந்தார்கள். துன்பக்காரருக்கு ஒரு
வீடுங்கட்டப்பட்டது, அதிலேநெரிந்துமுரி
ந்தவர்களையும் பயித்தியகாரர் முதலிய
நோயாளிகளையும் வைத்துச்சுகமாக்கிப் பே
ரான வைத்தியரானார். இப்படிச்சனங்க
ள் குருமாருடனே சேரவிரும்பியும் இவர்
கள் பிள்ளைகளைப் படிப்பித்துத் தங்கள் சீ
மைக்குக் கொண்டுபோய் விடுவார்கள் எ
ன்றும் வேதம் படிக்கிறது ஆகாதென்றும்
வெள்ளை மனிதருடனே சகவாசமாகாதே
ன்றும் பயந்தார்கள். இப்படியிருந்தும் இ
லேயாடுத்துத்துரை, மோயாடுத்துத்துரை,
தாவீத்துப்பாதிரியார், மயில்வாகனமுதலி
யார் இவர்களுடைய உதவியினாலேபள்ளி
க்கூடம்போட ஏதுவாகி மல்லாகத்திலேயு
ம்பண்டத்தெருப்பிலேயும் பள்ளிக்கூடம்
இஸ்தாபிக்கப்பட்டுப் பிள்ளைகள்படிக்கத்
தொடங்கிச் சனங்களும் பிரசங்கங்கேட்க
வரத்தொடங்கினார்கள்.

௯. சத்தியதரிசி எனத்தகும் ஒருவரின் சரித்திரம்.

இவர் பூரையரிடத்தில் இங்கிலிசுப்பாஷை கற்றுக்கொள்ளும்பொருட்டாகப் பட்டினத்தில் இருந்துவந்து தேல்லிப்பழையில் வாசம்பண்ணினர். அவருக்குக் கிறிஸ்தவர்களில் ஒருவன் ஒருவேதபுத்தகங்கொடுக்க அவர் அதை வாசித்து வேதம் உண்மையென்றும் அதை ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன் என்றுஞ்சொன்னர். இதைப் பள்ளிக்கூடத்தில் அவருடனே படித்த வேறொருவன் அறிந்து சத்தியதரிசியுடைய பிதாவிடத்துக்குப்போய் உமது மகன் கிறிஸ்தவனுகப்போகிருர் என்று சொல்லப் பிதாவுங் கோபங்கொண்டு மகன் தனது வீட்டுக்குப்போனவுடனே இனிப் பள்ளிக்குப் போகப்படாதேன்று தடுத்து அவருக்குப் போசனமுங் கொடுக்கப்படாது என்று சொல்லி நீ முன்போலச் சைவசமய முறையாக நடக்கவேணுமென்று சொல்ல அவர் அதை மறுத்ததினுலே ஒரு இருட்டறையிலே பூட்டிவைத்தார். அங்கேயிருந்து வெகு பிரயாசத்துடனே தப்பியோடித் தேல்லிப்பழைக்கு வந்து பூரையரிடத்திலே தனக்கு நடந்த காரியங்களை அறிவித்

து அங்கேயிருந்து மூன்று நாட்சென்ற பி
ன் சத்தியதரிசி இன்னவிடத்திலே இருக்
கிருரேன்று பிதாக் கேள்விப்பட்டு அவ
ரைச் சுறுக்கிலே அழைத்துவரும்படி ஆள்
அனுப்பினுர். அதற்குச் சத்தியதரிசி தன
க்குவரச் சம்மதமில்லையேன்றதாக மறு
மொழி சொல்லி அனுப்பினுர். இதுகாரி
யம் அந்நேரத்திலே பூரையருக்குத் தெரி
ந்திராது. பின்னும் பிதா இவரை அழை
க்கும்படி வேருெரு ஆளை அனுப்பினுர் அந்
நேரத்திற் சத்தியதரிசி வேதபுத்தகத்தை
அய்யரிடத்துக்குக்கோண்டுபோய் மத்தே
யு ய ம் அதிகாரம் ௩௪, ௩௯ ம் வசனங்க
ளைக் காண்பித்துக் கண்ணீருடனே அது
நல்லது என்று இங்கிலிசுப் பாஷையில்
சோன்னுர். அதற்கு ஐயரும் புதிய ஏற்
பாட்டின் வேருெரு பகுதியிலே ஒருவன்
மெய்க்கிறிஸ்தவனுகப் பிதாமாதாவை வி
ட்டு இழந்துவிட வந்தாலும் அப்படிச்
சேய்ய வேணுமேன்று சொல்லியிருக்கி
ன்றதேன்றுர். மற்றநாள் சத்தியதரிசியு
டைய பிதாத்தானே வந்து ஐயரிடத்தி
லே மகா ஆசார உபசாரமுள்ளவராகத்
தனது மகன் எங்கேயேன்று உருக்கத்து
டனே விசாரிக்கிறவரைப்போல விசாரி

த்து அவன் மாதாவை அறியாமல் வீட்டிலி ருந்து வந்துவிட்டான் இரண்டொரு நாளா லே வருவான். நீர் இவனைப் படிப்பித்தத ற்காகவும் பெரிய உபகாரம். இனிமேலு ம் அவனை இன்னின்னவிதமாகப் படி ப்பிக்க வேண்டுமென்றுஞ் சொன்னார். இது மாரீசமானபேச்சென்று ஐயர் அறிந் தும் மகன் போவதை விலக்கக்கூடாதே போனது. இப்படியிருக்க ஐயருடைய சமுகத்தைவிட்டுப் போனபின்பு சத்திய தரிசி உடுத்திருந்த நல்ல வஸ்திரத்தைப் பிதா உரிவித்து வேறொரு துணிகொடுத்து ச்சிறையைப் போலத் தலையிலே ஒரு சு மையைச்சுமத்தி வீடுசேருமட்டும் அடித் து விக்கிரகங்களை வணங்கவேண்டுமென் று வலோற்காரம்பண்ணினார். அவருடைய சுற்றத்தவர்களும்பாதிரிமார் தங்கள்மார்க்க த்திலே வரும்படி அவருக்கு மருந்துபோட் டு மயக்கிப்போட்டார்கள் என்றார்கள். அ தற்கு அவர் கிறிஸ்துநாதருடைய சுவிசேஷ மே என்னையிப்படியாக்கினதென்றார். பி ன்பு அவர்களுங் கிறிஸ்துமார்க்கத்தை இ வர் விட்டுவிடுவாரென்றெண்ணித் தீனிலே தாங்களும் மருந்திட்டுக் கொடுத்தார்கள். மறுபடியுஞ் சத்தியதரிசி அவர்களை விட்டு

த்தப்பியோடிவிட்டார். இக்காரியங்கள் ஒன்றுக்கும் அவர் அஞ்சவில்லையென்று மாதாக்கண்டு தேல்லிப்பழைக்கு வந்து பூ ரம்மாளிடத்திலே என்மகனை விட்டுவிடுங்களேன்று கண்ணீருடனே சொன்னாள். அதற்கு அம்மாள் உமது மகன் இவ்விடத்தில் இல்லை தாவீது அய்யருடனேவாசம் பண்ணுகிறதேன்று கேள்விப்பட்டேன் என்றாள். இவையெல்லாவற்றையும் மாதா நம்பாமற் கோபத்துடனே ஒலமிட்டு வானத்தைப் பார்த்து என் மகனை இழந்துவிட்டேன். இதேல்லாம் அவனை இங்கிலிஷப்பாஷை படிக்கவிட்டதினாலே எனக்குச்சம்பவித்தது என்றாள். பின்பு அவரைப் பிடித்து விக்கிரகத்தை வணங்கச் சொல்லிவிட் அதிலிருந்த அலங்கரிப்புகளையும் பிடுங்கிக்கோண்டு ஏக கடவுளை முழங்தாளிலிருந்து பிரார்த்தித்தார். இதற்காகவும் பிதா அவரைக் கடூரமாய்த் தண்டித்துக் கிறிஸ்துமார்க்கத்தை விட்டுவிட்டால் தனக்குள்ள ஆஸ்தியெல்லாம் இவருக்குத்தான் என்று சொன்னார். இவ்விதமாய் அவரைத் தடைப்படுத்த இன்னும் பலபல காரியங்களையுஞ் செய்துவந்தார். கடைசியாகச் சத்தியதரிசி இந்தச் சோதனை

களையெல்லாம் வெல்லாமலுங் கிறிஸ்தவ ஞகாமலும்போய்விட்டார். இது சுவிசேஷத்தைக் கேட்கிறவர்களிற் சிலர் முள்ளுக்குள் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பாயிருக்கிறுர்கள் என்று கிறிஸ்துநாதர் சொன்ன உவமையைக் காண்பிக்கும் பொருட்டாகச் சொல்லப்பட்டது. இந்தக்காரியங்கள் நடந்துவருகையில் தாவீத்தையர் இடையிடையே தெல்விப்பழையில் வநது சனங்களைக்கூட்டிப் பிரசங்கித்து வந்தார்.

## ச. உவாறன் ஐயருடையமரணம்.

௲அ௱ய௪ ம் ஆண்டு ஆவணி மாதம் ௩ ந் தேதி அளவில் உவாறன் பாதிரியார் சரீர சவுக்கியமற்றவராகக் கொழும்புக்குப்போய் அவ்விடத்தில் இருந்து ௲அ௱ய௫ ம் ஆண்டு அவரும் இறிச்சேட்டையரும் நன்நம்பிக்கைமுனையென்று சொல்லப்பட்ட கேப்புக்குச் சமுத்திரப்பிரயாணமாகச் சென்று உவாறன் ஐயருக்குச் சுகங்காணுமல் மரணமேயென்று சொல்லி வானத்தை அண்ணுந்து பார்த்து இது மரணமா இது மரணந்தான் ஆ! கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவே சீக்கிரமாய் வாரும் ஆ! தயவுள்ள

தேவதூதனே என்னை வழிநடத்துமேன்று சொல்லி இறந்துவிட்டார். இவரோ மகா தெய்வபத்தியுள்ளவருந் தமதுசகோதரராகிய குருமாரால் மிகவும் நேசிக்கப்படத்தக்க ஒருவைத்தியனுங் குருவுமாயிருந்தார்.

ரு. தெல்லிப்பழையில் பூரையர்செய்த நன்மைகள்.

பூரையர் தனித்திருந்து பிரயாசப்பட்டுத் தமது குருவுத்தியோகத்தை நடத்த அதிக முயற்சியுள்ளவராகத் தமிழ்ப்பாஷையைச் சில தூரங்கற்று சூஉளஎம் ஆண்டு ஐப்பசி மாதம் கூந்தேதி தமிழிலே முதற்பிரசங்கம்பண்ணினர். சூஉளஎம் ஆண்டு கார்த்திகை மாதம் எந்திகதி தெல்லிப்பழையிற் கோவில் கட்டப்பட்டு ஒலையினலே வேய்ந்து முடிந்தது. சூஉளஅம் ஆண்டு தை மாதம் எந்திகதி தெல்லிப்பழையிற் பூரையர் ஒருதருமப்பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கயோசித்தார் அதில் நாலு பிள்ளைகள்மாத்திரஞ் சேர்ந்தார்கள். இவ்விதமாய்ப் படிப்பிக்கிறதற்குப் பிள்ளைகளைச் சேர்த்துக்கோள்வது மகாபிரயாசமாய் இருந்தது. வேள்ளைக்காறர் வீட்டிலே பிள்ளைகள் சாப்பிடுகிறது இளப்பம்

என்றும், அவர்களைப் பிறவூருக்குக் கொண்டுபோவார்கள் என்றும், எண்ணெய்க்கடன் சோற்றுக்கடன் தீர்க்கக்கூடாத கடனென்றும் பிள்ளைகளைப் படிக்கவிடார்கள். வந்த பிள்ளைகளும் பள்ளிக்கூடத்தைவிட்டுப் போய்விடுகிறதைக் கண்டு, ஐயர் உடம்படிக்கையாகப் பிள்ளைகள் படித்துத் தேறு மட்டும் பள்ளிக்கூடத்தை விடமாட்டோம் அப்படி விடுங் காலத்திலே சென்ற செலவு கொடுப்போம் என்றும் எழுதுவித்துக் கொண்டார். இதைக்கண்டு சனங்கள் இன்னும் இன்னும் அதிகமாகப் பயந்தார்கள். அப்படியிருந்தும் அய்யருடைய தயவையும் பிள்ளைகளுடைய உடை நடை பாவனையையும் படிப்பையும் துரைமக்கள் மாணுக்கரைக் கணிக்கிறதையுங் கண்டு மற்றவர்களுந் தங்கள் பிள்ளைகளை ஒவ்வொருவராக அனுப்பத் தொடங்கினார்கள்.

௲அ௱௩௰அ-ம் ஆண்டு சித்திரை மாதம் ௰௫ங் திகதி தெல்லிப்பழையிற்கோயில் பிறதிட்டை பண்ணப்பட்டது. தாவீத்தையரவர்கள் பாயிரப் பிரசங்கமுஞ் செபமும்பண்ணினார். பின் பூரையர் "நீர் எழுந்து சீயோன்மேல் தயைசெய்வீர் அத

ற்குத்தயைசெய்யத் தக்கதும் நியமிக்கப் பட்டதுமானகாலமாயிற்று என்னும்" வசனத்தைக் கொண்டு பிரசங்கித்தார். அன்றைக்கு ஊ சனம் அளவுக்கு வந்தார்கள். அவ்வேளையிலே தாவீத்தையருடைய உபதேசிகளினுலே ஒருபதமும் படிக்கப்பட்டது. வரவரச் சனங்களிலுஞ் சிலர் பழக்கமானுர்கள். பூரையர் தமிழுங் கொஞ்சம் பேச அறிந்து கோவிலுங்கட்டிப் பிறதிட்டைபண்ணுவித்து ஊர்ப்பள்ளிக்கூடமும் நாலைந்துவைத்தார்; அந்தவருஷத்தின் கடைசியிலே ஊர்ப்பள்ளிக்கூடங்களில் எஎ ஆண்பிள்ளைகளுந் தருமப்பள்ளிக்கூடத்தில் உய பிள்ளைகளும் ஐயருடைய பராபரிப்புக்குள்ளாக வந்தார்கள்.

கூ. ஊர்ப் பள்ளிக்கூடத் தன்மைகள்.

அக்காலத்திலே உவாத்திமாருக்குப் பள்ளிக்கூடங்களில் வருகிற பிள்ளைகளின் தொகையையுந் தேற்றத்தையும் பார்த்துச்சம்பளங் கொடுக்கிறது வாடிக்கை. இதினுலே ஐயராகுதல் அவருடைய விசாரிப்புக்காரராகுதல் பள்ளிக்கூட விசாரணைக்குப்போனுல் மாடு ஆடு மேய்க்கிற வீண் பொடியர்களையும் உவாத்திமார் சேர்த்து

வைத்திருப்பார்கள் அன்றியும் ஐயர் போ
கும்வேளையிலே எட்டையும் பிடித்துக்
கோண்டு பேலத்துக் கூவென்று படிப்பா
ர்கள். உவாத்திமாருக்குப் பிள்ளைகளை ந
ன்ருய்ப் படிப்பிக்கிற சூட்சந்தேரியாமல்
அரிவரியிலே பத்தேட்டையும் எழுதிக்
கோடுப்பார்கள் சில பிள்ளைகள் அதை ஒரு
வருஷக்காலமாய்ப் படிப்பார்கள். அன்றி
யும் பிதாமாதாப் பிள்ளைகள் வேதாகமம்
படிப்பதை விதந்துகோள்ளுகிறதில்லை.
அமாவாசி பௌரணமி என்னுந் தினங்க
ளிற் பிள்ளைகள் படிப்பது ஆகாதேன்று
படிக்கவிடார்கள். சில நற்பழக்கமானம
னிதரைத் தவிர மற்றவர்கள் விசேஷமா
கப் பேண்சனங்கள் ஐயர்மாரைக் கண்
டவுடனே ஒடியோளித்து விடுவார்கள்.
பிராமணரும் வேள்ளைக்காறருடனே கோ
ண்டாட்டம் ஆகாதேன்று போகமாட்டா
ர்கள். அன்றியும் சைவ சமயத்தில் அ
திக பத்தியுள்ளவர்களும் பணக்காரரு
மான உவாத்திமார் ஐயர்மாரிடத்திற் ப
டிப்பிக்க முதல் முதல் சம்மதிக்கவில்
லைச் சற்றேபணக்குறைவானவர்கள் ப
டிப்பற்றவர்கள் உவாத்திமார் ஆனுர்கள்.
இவர்கள் கிழமைக்கோருதரம் ஐயரிடத்

தில் வந்து பிள்ளைகளுக்குப் படிப்பிக்கிற வேதப்பாடங்களைப் படித்து வாசிக்கப் பழகுவார்கள். அக்காலத்தில் வேதப்படிப்புகளையெல்லாம் வணக்கம்படிக்கிறதென்று சொல்லுவார்கள்.

## எ. சனங் தருமப்பணவருகை எப்படியென விசாரித்தல்.

ஐயரோ கோவில் கட்டுவிப்பதையும் வெகு தச்சர் கொல்லர் மற்றுங் கூலிச்சனங்களுக்குப் பணங்கொடுப்பதையும் உவாத்திமாருக்குந் தருமப்பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குந் துன்பக்காரருக்கும் யாசகருக்கும் பணஞ்செலவிடுகிறதையுங்கண்டு இவ்வளவுபணமும் வருகிறதற்குக் காரணம் யாது ஒரு தருமத் துரைச்சாணி சீமையில் இருந்து அனுப்புகிறுள் என்றுஞ் சிலர் நாங்கள் உழைத்து இராசாவானவருக்குக் கொடுக்க இராசா இவர்களுக்குக் கொடுக்கிறுர் என்றுஞ் சொல்லிவந்தார்கள்.

## அ. சனங்கள் குருமாரை அனுப்பினவகை.

ஐயர்மார் பிறதேசத்தவர்கள் என்றும்

தமிழ் தெரியாதவர்கள் என்றும் சனங்களுடைய பழக்கத்தை அறியாதவர்கள் என்றும் ஐயருடனேசேர்ந்த கூலிக்காரரும் வேலைக்காரருங் கட்டுவேலைவிசாரிப்புக்காரரும் பலவிதமாய் அனுப்பிவந்தார்கள். பள்ளிக்கூடங்களைக் கட்டுவிக்கிறவர்கள் சோத்திமரங்களையும் விளாத்தி இருப்பை முதலான தூண்களையும் போட்டுக்கட்டுவிப்பார்கள். கள்ளரும் களவெடுக்க மிகவும் பிரியப்பட்டார்கள்.

கூ. மார்க்கசாதிப்பு.

வேதகாரியங்களைப்பற்றி விசாரித்தாற் காந்தபுராணந்தான் தங்களுடைய மேலான ஆகமம் என்றுஞ் சிவன்தான் தங்கள் கர்த்தாவென்றுங் கிரகணம் வருகிற நாட்களைச் சொல்வது தங்கள் பிராமணர் செய்கிற அற்புதமென்றுஞ் சொல்வார்கள். அய்யர் மெத்தக்கல்வியற்றவரென்றுங் கிரகணம் வருகிற முறை இன்னதென்று அறியாதவரைப்போலவும் நினைத்துக்கொண்டார்கள். அய்யமாரோ தங்களுக்குச் சோதிட சாத்திரம் அதிகம் தெரிந்தது போலக் காண்பிக்க வில்லை. கிரகணம் வருகிறவிதம் எப்படியென்று பிராமணர் இடத்திற்கேட்டால் இராகு கேதுக்

களினுற் சம்பவிக்கிறதேன்றும் அட்டயா
ஊனகளும் ஆதிசேடனும் பூமியைத் தாங்
குகிறதேன்று சோல்வதுமன்றிப் பூமியான
து உருட்சியான வடிவமாய் இருக்கிறதே
ன்று சோல்லும் போது நகைப்பார்கள்.
இவையேல்லாவறிற்கும் அய்யர் மவுனி
யாய் இருந்ததேயன்றிப் பிள்ளைகளைநன்
ருய்ப் படிப்பிக்குமட்டுஞ் சாத்திரங்களை
ப்பற்றி விபரமாய்ப் பேசத் தோடங்கவி
ல்லை. உவாத்திமார் முதலானவர்க
ள் ஐயரை அறிந்தவர்கள் அவரிடம் வரு
ம்போது நேற்றியில் விபூதியை அழித்து
வருவார்கள். ஐயர்மாரிடஞ் சேர்ந்த
பிள்ளைகளையும் உதவிக்காரரையும் வே
குதூரம் நிந்திப்பார்கள். அவர்களில் யா
தோருவருக்கு இடையூறுவந்தால் பாதிரி
மாரிடஞ் சேர்ந்து வேதம் படித்ததினுல்
வந்ததேன்று சோல்லுவார்கள்.

## ௯. சனங்களின் அவபத்தியான எண்ணம்.

ஒருமுறையிற் பிறப்பள்ளிக்கூடத்திற்
படித்த சிறுவனுக்கு ஒரு நோவுண்டா
னதினுல் மாதாக் குறிசோல்லுகிறவளிட
த்தில்வந்து விசாரிக்க அவள் இந்தத்துன்

பம் வணக்கம் படித்ததினுலே வந்த தேடி என்று சொல்ல மாதாப் பிள்ளையை ப்பள்ளியைவிட்டுக் கூட்டிக்கொண்டுபோ ய்விட்டாள் இது புறப்பள்ளியொன்றி லே நடந்தகாரியம். மேலும் ஐயர் வீடு முதலானவைகளை நாட்பாராதபடி கட்டு வித்தபோதும் நிலம் எடுப்பித்துக் கிணறு வெட்டுவியாததையும் மரங்களை நாளுக் கு நடுவியாததையுங் கண்டு கேடுபாடு வ ரக்கூடுமென்று எண்ணினுர்கள். தமிழ்க் கோவில்களுக்குள் ஐயமார் போவதுதோ ஷமென்றும் எண்ணினுர்கள். ஒருமுறை கட்டுப்பாடில்லாதிருந்த ஒரு வீரபத்திர கோவிலுக்குட்போய்ப் பூரையர் வீரபத்தி ராவென்று கூப்பிட அவருக்குப் பிற கேபோன் பிள்ளையொருவன் அவனும் வீரபத்திரனுனபடியினுலே என் ஐயா இ ங்கே நிற்கிறேன் என்க அதற்கு ஐயர் இங் கே நிற்கிருயோவென்ருர், இதினுலே விக் கிரகம்பேசாது அது வீணென்ற கருத்தைக் காண்பித்ததாய்த்தெரியவருகிறது. இக்கால த்தில அய்யருக்குப் பிரதான உதவிக்கார ராகத் தமிழ்ப்படிப்பித்ததும் மற்றுங் கவ் வை காரியங்களைப் பராபரித்ததும் மலை யப்பபிள்ளையென்பவரும் நீக்கிலாசுப்பிள்

ளையென்பவருமே. இந்த மலையப்பபிள்ளையென்பவர் கொழும்பிலே பிரசங்கியாயிருந்த ஒருவருடைய மகன். இவர் பாஷை பேசுவதிலுந் துபாசித்தனம்பண்ணுவதிலுங் கெட்டிக்காரனுகவிருந்தார்.

௲௮௱௰௬ம் ஆண்டு ஐப்பசி மாதம் ௰௨ந் தேதி பூரையருக்கு மலையப்பர் தமிழ்படிப்பிக்கத் தொடங்கினுர். இவர் ஒரு முறையிற் தெல்லிப்பழைக்குக் கிட்ட ஒரிடத்திலிருந்த ஒரு விக்கிரகத்தை எரிகிறசூளையிலே போட்டுவிட்டார். அதினுலே அவருக்கு யாதொரு இடையூறு வருமென்று சனங்களிற் சிலர் எண்ணினுர்கள் காரியமிவ்விதமாயிருக்கச் சபையிலே யாதொருவருஞ் சேர்ந்ததுமில்லை. பெண்பிள்ளைகள் படிக்கிறதற்குச்சனங்கள் பிரியப்பட்டதுமில்லை. பூரம்மா பெண்பிள்ளைகள் படிக்கவேணுமென்றதற்குச் சனங்கள்சிரித்துப் பெண்பிள்ளைகள் படிக்கிறது வளக்கமில்லை அவர்களை உங்களிடத்தில் விட்டால் மருங்குக்கீனம் பிறர் விவாகம் பண்ணவும் மாட்டார்கள். மடைப்பள்ளியிலே இருக்கிறவர்களுக்குப் படிப்பேன் படித்தாற் பெண்மூப்புக்கொண்டு பொல்லாதவர்களாய்ப் போவார்கள் என்றுர்கள். அ

ப்படியிருந்தும் அம்மாமிகவும் மெலிந்து பசியினுற் செத்துப்போக எதுவாயிருந்த தாய்தகப்பனற்ற ஒரு சிறுபோடிச்சி அவர் களுடைய தோட்டத்தின் மரத்துக்குக்கீ ழே வந்திருக்கிறதைக் கண்டு அவள் அம் மா நீர்தான் எனக்குச் சுவாமியென்று சொ ல்ல அம்மா அவளை ஏற்றுப் பராபரிக்கத் தொடங்கினர். இவளுடைய ஆஸ்தியை மாமன் எடுத்துக்கொண்டு அந்தரிக்க விட் டுவிட்டான் இவளம்மாவிடத்தில் இருந்து கொஞ்சநாளையாலே செத்துவிட்டாள் பின் பு பலவிதமாய்ப் பிரையாசப்பட்டு ஆறாய வ ம் ஆண்டு அளவில் நாட்பள்ளியில் எட் டுப் பெண்பிள்ளைகளும் ஞாயிற்றுக்கிழ மையிலே கோவிலுக்குப் பன்னிரண்டு பெண்பிள்ளைகளும் வரவழிபண்ணிக்கொ ண்டார். பெண்சனங்களையோ கோவிலுக் கு வரப்பண்ணுகிறது மகா பிரயாசமாயிரு ந்தது அப்படியிருந்துஞ் சிலபேர் அவரை வீட்டிலே மாத்திரம் வந்துகண்டுகொண்டு போய்விடுவார்கள். இப்படியிருக்கத் தா வீத்தையருடைய மகளொருத்தி அம்மாவு க்குதவிக்காரியாகப் பெண் பிள்ளைகளைப் படிப்பிக்கும்படி அய்யருடைய சமுசா ரத்திலே வந்திருந்தாள். தாவீத்து அய்ய

யருடைய பெண்சாதியும் ஸ்கிருதர் என்று சொல்லப்பட்ட ஒரு உலாந்தாக்கார அம்மாவும் தெல்லிப்பழைக்கு வந்து இடையிடையே அவ்விடத்திற் குறிக்கப்பட்ட பெண்சனங்களுக்கு வாசித்துக்கூட்டம் வைத்துப் புத்திசொல்வார்கள். அந்த உலாந்தக்கார அம்மா கண்ணுடிபோட்டுப் புத்தகங்களை வாசிக்கிறதைக் கண்டு இவர்கள் ஆச்சரியப்படுவார்கள். இயேசுக்கிறிஸ்துவென்றும், பராபரனென்றும், பரிசுத்தாவியானவரேன்றுஞ் சொல்லுகிற சொற்கள் சனங்களுக்கு மகாநூதனம்போலே இருந்தது. தெல்லிப்பழையில் நடப்பட்ட கிறிஸ்துமார்க்கக் குருவென்ற மரமானது வேரும்பற்றித் துளிருந்துளிர்த்துப் பச்சனவாகக் காணப்படுகிறதாயிருந்தது. அடுத்த கோவிற்பற்றுகளிலுந் தெல்லிப்பழையிலே ஒரு பாதிரியார் வந்திருக்கிருரேன்ற பேரேட்டினது.

இதிவ்வளவில் நிற்க வட்டுக்கோட்டையிலே ௲௮௱௰௭ ம் ஆண்டு ஆனி மாதம் ௨ ந் தேதி மேக்ஸ்(Meigs) அய்யர் பட்டினத்திற் சிறிதுகாலமிருந்துவந்து சேர்ந்தார்; இவர் இறிச்சேட்டையருந்துன்பமாய்ப் பிறவூருக்குப் போய்விடப் பூரையரைப் போலத்

தாமும் பிறப்பள்ளிக்கூடங்களை வைத்துப் படிப்பித்தும் வீடுகட்டுவித்தும் பிரசங்கம் பண்ணிக்கொண்டும் வந்தார். ௲௮௱௩௰அம் ஆண்டு வைகாசி மாதம் எ௩ தேதி கா பிரியேற்பிள்ளை என்பவர் அவருக்குத் துபாசியாகவும் தமிழ்ப் படிப்பிக்கிறவ ராகவும் வந்தார். அய்யர் வட்டுக்கோட் டைக்கு வந்து சனங்களுடனே பழகி ஒரு இங்கிலிசுப் பள்ளிக்கூடமும் வை த்துப் படிப்பித்து ௲௮௱௩௰௪ ம் ஆண்டு ஆடிமாதம் அளவில் பிள்ளைகளுக்கு அன்னவஸ்திரங் கொடுத்துத் தருமமாக ப்படிப்பிக்க யோசனைபண்ணி முதன்முத ல் மூன்றுபிள்ளைகளைத் தாபரிக்கத்தொடங் கி உ௬ ந் தேதி அளவில் ஐந்து பிள்ளைகளள வுக்குச் சேர்ந்தார்கள்; இந்தப் பிள்ளைகளு ம் பிற ஊரிலேயிருந்து சேர்க்கப்பட்ட வர்கள். சனங்கள் ஐயருடைய வளவுக்கு ள்ளே பிள்ளைகள் சாப்பிட்டாற் சங்கை யீனமேன்று நினைத்ததினால் அடுத்த பிற வளவிலே அய்யர் ஒரு மாலுங் கட்டுவித்து ச் சமையற்காரனாகச் சனங்கள் போதிய வேளாளனென்றெண்ணுகிற ஒருவனையும் வைத்தார். அப்படியிருந்தும் வட்டுக்கோ ட்டையிலுள்ள பிளளைகளில் இரண்டோ

ருவரைத்தவிரவேறொருவரும் வந்ததில்லை அவ்விடத்திலுள்ள ஒரு மனிதனிடத்தில் உம்முடைய மகனைப்படிப்பிக்க வேண்டுமென்றுசொல்ல அதற்கு மறுபேர் நீந்திப் பார்களென்றும் மாதாவுக்கு மனமிராதேன்றும் அயலவர்களிற் சிலருடைய பிள்ளைகள் வந்தாற் தானும் விடுவேனென்றுஞ் சொன்னான். மேலும் உற்றிடையாக உமது மனதிலேயிருக்கிற எதிர்நியாயமென்னவென்று கேட்கப் படித்துத்தேறி அறிவிலே தலைப்பட்டாற் பிள்ளைகள்உங்கள் மார்க்கமாய் விடுவார்கள் அப்போதது எங்களுக்குப்போதாதேன்றுஞ் சொன்னான். அப்படியிருந்தும் வந்தபிள்ளைகளை அய்யரும் அம்மாவும் தயவாகநடத்திச் சாப்பாடும் வஸ்திரமுங்கொடுத்து பராபரித்து வந்தார்கள் பிள்ளைகள் ஐயருடைய வளவுக்குள்ளே தண்ணீர் முதலாகக் குடிக்கமாட்டோமென்றுவிட்டார்கள். மார்க்க காரியத்திலேயுஞ்சனங்களும் பிள்ளைகளும் மகா வெறுப்பாயிருந்தார்கள். அய்யர் தமிழ்ப்படித்து ௲௮௱௨௰வும் ஆண்டு புரட்டாதி மாதம் ௰௩ந் தேதி தமிழிலே பிரசங்கம்பண்ணத் தொடங்கினார். இப்படிச் சனங்களுடனே பழக்கமாகிச் குறிச்சிகளுக்கும் பள்ளிக்கூடங்க

ளுக்கும் போய்ப் பிரசங்கம்பண்ணி ஒரு முறை பத்திரகாளி கோவிலுக்குப்போய் அங்கேநடந்த காட்சிகளைக்கண்டு சனங்களுடனே விக்கிரகாராதனையைப் பற்றிப் பேசினார். அவர்கள் இந்தத்தேய்வம் பழி வாங்குகிற தேய்வம் இதற்கு இரத்தப்பலியிடுகிறோமேன்றார்கள். மேலும் அக்காலத்திலே பத்திரகாளி வேளிப்பட்டுக் கோவிற் பூசாரியானவனுக்கு எனக்கு இதுமுதல் மட்கோவில் வேண்டாம் ஒரு கற்கோவில் வேண்டுமேன்று சோன்னதாகக் கேள்விப்பட்டார். இதுநிற்கப் பேண் பிள்ளைகளைச் சேர்த்துப் படிப்பிக்க அம்மா மிகவுந் தேண்டித்து நாலு மூன்று பிள்ளைகளைச் சேர்த்துப் படிப்பித்தா பிள்ளைகளுந் தங்களிடத்திற் சாப்பிட விரோதிக்கிறதைக்கண்டு ௲௮௱௩௰ ஆண்டு தை மாதம் பிறப்பள்ளியிற் பிள்ளைகளேல்லாரையும் அழைத்துப் படிப்புஞ்சோதித்துப் பிரசங்கம்பண்ணினபின்பு அவர்களைச் சாப்பாடுசமைப்பித்திருக்குது சாப்பிடுங்களேன்று சோல்ல ௰௩ பேயரைத்தவிர மற்றவர்கள் சாப்பிடமாட்டோமேன்றார்கள். சிலகாலஞ் சேன்று பிறவளவுக்குள்ளேகட்டின சமையல் வீட்டை விட்டுத் தருமப்பள்ளிக்கூட

த்தையெடுத்துத் தமதுவளவுக்குள்ளே பி
ள்ளைகள் சமைப்பித்துச் சாப்பிடவேண்டு
மென்றுசொல்ல அவர்களிற்சிலர் தவிர ம
ற்றவர்கள் ஓடிப்போய்விட்டார்கள். தெல்
லிப்பழையிலும் பூரையர் தூவுராயசுூம் ஆ
ண்டு மார்கழி மாதம் உரு ந் தேதி பிறப்ப
ள்ளியிற் பிள்ளைகளெல்லாரையுங் கூடிய
சனங்களையு மழைத்துக் கிறிஸ்துப்பிறந்த
பெருநாளில் பிரசங்கம்பண்ணிச் சாப்பிட
மனமான பிள்ளைகளுஞ் சாப்பிடலாமென்
று சொல்ல ாடு ஆண்பிள்ளைகளும் உச பெ
ண்பிள்ளைகளும் அங்கேசாப்பிட்டார்கள்.
அன்றைக்கு இருநூறு (உா) சனமும் மூன்
நூறு (ஙா) பிள்ளைகளுங் கோவிலுக்கு வந்
தார்கள்.

தூவுராயவு ம் ஆண்டு ஆவணிமாதம் உவு
ந் தேதி சீமையிலுள்ள வேதாகம சங்கத்து
க்குதவிச்சங்கம் யாழ்ப்பாணத்திலே வை
க்கப்பட்டது. இவ்விடங்களிலே அச்சுப்
பதிக்கப்பட்ட வேதாகம புத்தகங்கள் அ
ருமையாகவிருந்தன சனங்களுக்குக்கொடு
க்கப் புத்தகமில்லாததினால் பூரையர் ஓலை
களிலே வேதகாகிதங்களை எழுதித் தமது
பேரையும்பதித்துப்போதியமனிதருக்கும்
மற்றுஞ் சனங்களுக்குமனுப்புவார் அவர்க

ளிற்சிலர் அதை ஒப்பமென்று பயந்துவா
ங்கமாட்டார்கள். அச்சுப்பதிக்கிறது இன்
னதென்று சனங்களுக்குத் தெரியாது. இப்
படியிருக்கக் கிறிஸ்தவர்களாய்ச் சபையி
லே சேருகிறதற்கு ஒருவரும் வரவில்லை.
குருமார் இராப்போசனமனுபவிக்கிறதை
க்கண்டு குமுக்கார்அனுபவிக்கிறார்களென்
று பகிடிபண்ணுவார்கள். இப்படியிருந்
தும் காபிரியேற்பிள்ளையென்பவர் கூஅஉ
யகூம் ஆண்டு ஐப்பசிமாதம் யங் தேதியி
லும் நீக்கிலாசுப்பிள்ளை என்பவர் அந்த
மாதம் ௩௧ங் தேதியிலுஞ் சபையிலே சே
ர்ந்தார்கள். அய்யமாரிரண்டுபேரும் அ
வர்கள் மனைவியரும் காபிரியேற்பிள்ளை
நீக்கிலாசுப்பிள்ளை என்ற இரண்டுபேரும
ன்றி வேறொருவருங் கிறிஸதவர்களல்ல.
அய்யமாருஞ் சற்றேதுன்பமாயிருக்க உவா
றன்பாதிரியாரும் மரித்துவிட உதவியற்ற
வர்களாய் இன்னுங்குருமார் தேவையென்
ற கவலையோடே இருந்தார்கள் வேறே கு
ருமாரில்லாததினாலே நீக்கிலாசுப்பிள்ளை
யைப் பண்டத்தெருப்பிலும் மலையப்ப
ரை மல்லாகத்திலும் வைத்து அங்கங்கே
வீடுங் கட்டுவித்துக் கொடுக்கப்பட்டது.
மல்லாகத்திலிருக்கப்பட்ட போதியமனித

ரிற் சிலர் பள்ளிக்கூடங்கட்டக் கையெழு
த்துவைத்துப்பணங்கொடுத்துத் தங்கள்பி
ள்ளைகளை இங்கிலிஷ்படிக்க விட்டார்கள்.
இப்படி முன்வந்த குருமார் வேதத்தைப்
போதித்தும் பள்ளிக்கூடங்களைப் படிப்பி
த்துஞ் சனங்களுடைய பாஷையைச் சற்
றே பயின்றும் வருகிற காலத்தில் "விளை
வோ மிகுதி வேலையாட்களோ கொஞ்சப்
பேர் ஆகையால் விளைவுக்கேசமான் வே
லையாட்களை அனுப்ப அவரை வேண்டிக்
கொள்ளுங்கள்" என்ற வசனத்தின்படி அ
திககுருமார்தங்களுக்குதவியாக வரவேண்
டுமென்று தங்கள் சங்கத்தாரிடங் கேட்டா
ர்கள். இப்படிக் கேட்டிருக்கையில் கூஅ௲
யகூ ம் ஆண்டு ஆனி மாதம் ௪ ங் தேதி அ
மரிக்காத் தேசத்திலே (Boston) வோசுற்
றன் என்ற இடத்திலிருந்து புறப்பட்டு கூ
அ௱உய ம் ஆண்டு மாசி மாதம் ய௪ ங் தேதி
அளவிலே குருமார் யாழ்ப்பாணம்வந்துசே
ர்ந்தார்கள். ஊடுவாட்டையர் வட்டுக்கோ
ட்டையிலும் இஸ்க்கடரையர் தெல்லிப்ப
ழையிலுஞ் சிறிதுநாளாகவிருந்தார்கள். கூ
அ௱உய ம் ஆண்டு ஆனிமாதம் உவின்சுலோ
அய்யரும் இஸ்ப்போல்டிங் அய்யரும் உடு
விற் கோவிலுக்குத் தங்கள் மனைவியரு

டனே குடியாக வந்தார்கள் வரச்சிறிதுநா ளைக்குமுன்னே அய்யமார்வந்து கோவிலை ச்சிறப்பிக்க நினைத்து அவ்விடத்திலுள்ள கட்டுவேலைகளைப் பராபரித்து வந்தார்கள். அவ்விடம் பாழான இடமாக இருந்த து. சனங்கள் பேத்தாத்தையென்ற தே விக்கு மிகவும் பயந்தவர்களாயும் மற்றும் பசாசுகள் அவ்விடத்திலிருக்கிறதாகவும் எ ண்ணி வந்தார்கள். சூளா ம் ஆண்டிலேயி ருந்த சிவர்களேயன்றி மரந்தடி ஒன்றுமிரு ந்ததில்லை இப்படியிருக்க அய்யமார் ஊர் ப்பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து உளரு பி ள்ளைகள் அளவுக்குப் படிப்பித்தார்கள். மேலும் ஒரு தருமப் பள்ளிக்கூடம் ஸ்தா பித்து அதிற் யஉ பிள்ளைகளை வைத்துப் படிப்பித்தார்கள். இந்தப் பிறப்பள்ளி க்கூடங்களிற் பிள்ளைகள் எல்லாரும் ஞா யிற்றுக் கிழமையாந் தோறுங் காலமே வெள்ளேனக் கோவிலுக்குவந்து பாடங்க ளைப்படித்துப் பிரசங்கங்கேட்டு வீட்டுக்கு ப்போவார்கள். உவின்சுலோ அய்யர் எட் டுமாசத்துக்குள்ளே தமிழ்ப்பாஷை படித் துப்பிரசங்கம்பண்ணப் பயிற்சியுள்ளவரா கிக் கொண்டார். புதிதாகவந்த அய்ய மாரும் ஒரு கூட்டமாகவந்து கூடித் தமி

ழ்ப்பாஷையைப் படித்துக்கொள்வார்கள். இதுநிற்க கூஅஉக ம் ஆண்டு ஆடி மாதம் இஸ்கடரையர் பண்டத்தெருப்புக் கோவிலுக்குக் குடியாகவந்தார். அதற்குச் சிறிது நாளைக்குமுன்னே அங்கேநிற்கிற ஆலமரத்துக்குக்கிட்ட ஒருமால்கட்டி அதிலிருந்தார். வெகு துன்பக்காரச்சனம் அய்யரிடத்துக்கு வருவார்கள் அவருக்கு யோட்சுகோக் பிள்ளையென்ற உலாந்தாக்கார வாலிபனுதவியாகவிருந்தார். இவர்முன்னே காலஞ் சென்றுபோன உ.வாறன் பாதிரியாரிடத்திலே வயித்தியங்கற்றுப்பின்பு இவருடனே நின்று இங்கிலாந்துக்குப்போய் அவ்விடத்து நல்லுபகாரிகளால் உத்தியோகஸ்தனுக்கப்பட்டார். அய்யா தெல்லிப்பழையிலிருந்தகாலம் முதல் வெகு துன்பக்காறச்சனம் அவரிடத்துக்கு வருவார்கள். இது வேதத்தைப் போதிக்கிறதற்கு மகாநல்வழியாயிருந்தது. இவர் பேரான வயித்தியரென்று வெகுதூரமெட்டினது. துன்பக்காறருக்குக் கையிலே இரத்தங்கோத்திவாங்குகிறதைச் சனங்கள்கண்டு வெகுதூரம் பயப்படுவார்கள். மகா நல்ல இரணவைத்தியனுயிருந்தார். சிலநாட்களில் ஐம்பதுக்கு மேற்பட நூறுசனம் வரையிலேவருவா

ர்கள். அய்யர் பண்டத்தெருப்புக்குப் போ
ன பின்பு காலமே தோறும் துன்பக்காரரே
ல்லாரையும் ஓரிடத்திலேசேர்த்துப் புத்தி
சொல்லிச்செபம்பண்ணப்படும். துன்பக்
காரரிருக்க ஒரு வீடுகட்டப்பட்டது. அவர்
களங்கேயிருக்கிற ஆலமரத்திலே பேயிருக்
கிறதென்று நினைத்தார்கள். ஒருநாளிராத்
திரி அய்யரிருந்த அறையின்வீட்டில் ஒலை
யை எலி கறகறென்றரிக்க, அய்யரதைக்க
லைக்க அந்தச்சத்தத்தை அன்றிராத்திரிக்
கேள்விப்பட்ட துன்பக்காரர் பசாசல்ல
வோவென்று மிகவும் பயந்தார்கள். இது
ஏன்சொல்லுகிறதானல் பசாசுக்குச் சனங்
கள் எவ்வளவு பயப்படுகிறார்கள் என்ப
தைக்காண்பிக்க, அய்யர் வயித்தியராயிருந்
ததினல், மறு இடங்களுக்குப் போகாத
பெண்களும் வந்து வேதத்தைக் கேட்கவ
ழியாயிருந்தது. சூவுஉயம் ஆண்டு ஆவ
ணி மாதம் ௬௰ ந் தேதி ஒரு தருமப்பள்ளி
க்கூடம் ஸ்தாபித்து கூ பிள்ளைகளைத் தெல்
லிப்பழையிற் பள்ளிக்கூடத்திலிருந்துகொ
ண்டுவந்து படிப்பிக்கத்தொடங்கினர். அ
ன்றியும் வடலியடைப்பு மாதகல் சுளிபுர
ம் முதலான குறிச்சிகளிலே பள்ளிக்கூட
ங்களை நியமித்து படிப்பித்து வந்ததுமன்

றி ஞாயிற்றுக்கிளமையாந்தோறும் பிரசங்க
மும்பண்ணிவருவார். ௱௫௰, ௨௱ பேயரள
வுக்குப்பிரசங்கத்துக்கு வருவார்கள். இது
வன்றிக் குறிச்சிக்குக்குறிச்சி போய்ப்
பிரசங்கம்பண்ணப்படும். அக்காலத்தில்
இவரிடத்திற் படித்தபிள்ளைகளுக்குள் சந்
தியாகுப்பிள்ளை அல்லது உவல்பிள்ளையெ
ன்பவரும் அந்தோப்பிள்ளையும் அதிக உத
விக்காரராக இருந்தார்கள். சந்தியாகுப்பி
ள்ளையென்பவர் ஒரு பரிகாரியாராகவிருந்
தார். பண்டத்தெருப்புக் கோவிலுக்குச்
சேர்ந்த குறிச்சிகளில் இருந்து பலபலபோ
தியமனிதர் அய்யரிடம் வருவார்கள். அ
வர்களிற் பலர் ரோமான் சமையத்தவர்
கள். அவர்களுக்கும் இவருக்கும் மார்க்க
த்தைப்பற்றிய சம்பாஷணைகள் தர்க்கங்க
ள் உண்டாகிச் சிலபுத்தகங்களும் இருதிற
த்தாருக்குள்ளேயும் எழுதப்பட்டன. அ
வைகளேன்னவெனில் நேசநிருபம், இர
ண்டாங்கற்பனை விளக்கம் முதலியவைக
ளே. இவருக்கும் துன்பநிமித்தம் இவரிட
ம்வந்த உரோமான் சமையக்குருமாருக்கு
ம் அறிமுகம்வந்து அவர்களுடனே வேத
காரியங்களை எடுத்துப்பேசுவார். அவர்கள்
தங்கள் சீஷர்கள் இவரிடத்திற்குப் பிரசங்

கத்துக்கு வரப்படாதேன்றும் வேதாகமங்
கள்வாங்கி வாசிக்கப்படாதேன்றுந் திட்ட
மாகக்கட்டளை பண்ணுவார்கள். இஸ்க்
கடரையர் தமிழ்ப்படித்து சூஅாஉயம் ஆ
ண்டு ஐப்பசிமாதம் அங் தேதி பண்டத்தே
ருப்பில் முதல் தமிழ்ப் பிரசங்கம்பண்ணி
ஞர். தெல்லிப்பழையிலே இருந்தகாலத்தி
லே தமிழ்ப்பேசப் பழகியிருந்தார். இந்தக்
காலத்தில் வில்லவராயர் பொன்னம்பலம்
என்பவரிவருடைய உதவிக்காரஞகவிருந்
தார். இனி, சூஅாஉயம் ஆண்டளவிலே
தெல்லிப்பழையிலேநடந்த காரியங்களைப்
பற்றிச் சொல்வோம். கார்த்திகை மாதம்
ருங் தேதி பூரையர் மல்லாகத்திலே இஸ்
பெல்டுவின் துரை அவர்களுடைய கோட்
டிலே பிரசங்கம் பண்ணிஞர், இஸ்பெல்டு
வின்துரையவர்கள் குருமாருக்கு அவர்கள்
காரியங்களில் அநுசாரியாயிருந்தார். அன்றி
யும் அக்காலத்தில் ஙீதி இராசாவாயிருந்த
சிறி றிச்சாட்டு ஒற்றிலி நல்லுபகாரியாக
விருந்தார். சூஅாஉகம் ஞூ பங்குனி மீ
யகங் தேதி அந்த இராசா தெல்லிப்பழைக்
குவந்து தருமப் பள்ளிக்கூடத்திற் பிள்ளை
களை இங்கிலிசு இலக்கணத்திலும் புவன
சாத்திரத்திலுஞ் சோதித்துப்பெண்பிள்ளைக

ளுந் தமிழ் வாசிக்கக்கேட்டு அவர்கள்பள்ளிக்கூடத்தை விட்டுப் போம்போது வெகு மதியாகக் கொடுக்கச் சிலபணங்களையுங்கொடுத்து, அவ்விடத்திலே வந்துகூடின சனங்களுக்குச் சிலபுத்திகளையுஞ் சொல்லிப் போனார். இராசாக்குருமாருடனே சேர்ந்திருக்கிறதைத் தலைமைக்காரருஞ் சனங்களுங்கண்டு குருமாருடனே கொண்டாட்டஞ்செய்து அநுசாரிகளாகவந்தார்கள்

யஉ. வட்டுக்கோட்டையிற் சாத்திரப்பள்ளிக்கூடத்தைப் பற்றி.

௲அ௱உ௲ம் ஆண்டு ஆடிமாதம் உகந் தேதி வட்டுக்கோட்டையில் ஒரு சாத்திரப்பள்ளிக்கூடம்இஸ்தாபிக்கப்பட்டது; இதற்குமுதல் குருமாரிருந்த தெல்லிப்பழை பண்டத்தெருப்பு முதலிய இடங்களில் அங்கங்கே தருமப்பள்ளிக்கூடங்கள் வைக்கப்பட்டு ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் படித்து வந்தார்கள் இப்பொழுதோ இது அந்தந்த அய்யமாருக்குச் சுவிசேஷத்தை அதிகமாய்ப் பிரசங்கிக்க விடுதலையாகவும் மாணாக்கர் உயர்ந்த கல்விகள் சாத்திரங்களிற் தேறும் பொருட்டாகவும் படிப்பிலே திருந்தினபிள்ளைகளை வட்டுக்

கோட்டையிற் சேர்த்துமற்ற ஆண்பிள்ளை
கள் தெல்லிப்பழையிலும் பெண்பிள்ளைக
ள் உடுவிலிலேயும் படிக்க ஒழுங்கு படுத்
தப்பட்டது. இந்தச்சாத்திரப்பள்ளியைப்ப
டிப்பிக்கப் பூரையர் தலைவராகவும் கவிரி
யேற்பிள்ளையென்பவர் உதவியாசிரியராக
வும் நியமிக்கப்பட்டார்கள். பள்ளிக்கூ
டம் இஸ்தாபித்த அன்று சிலதுரைமாரும்
இஸ்போல்டிங் அய்யர் நயிற்றய்யர் தாவீது
அய்யர் முதலான பாதிரிமாரும் இருவாலை
வித்துவானாகிய சேனாதிராய முதலியாரும்
சுவாமிநாதபிள்ளை முதலான படிப்பாளிக
ளும் அந்தந்தக் கோவிற்பற்றிலுள்ள போதி
யமனிதரும்வர அழைக்கப்பட்டார்கள் அ
த்தருணத்தில் பூரைய்யர் பள்ளிக்கூடம்
இஸ்தாபிக்கப்படும் நோக்கத்தையும் கல்
வியின் மகத்துவத்தையும் பற்றிச் சங்கத்
தாருக்குப் பிரசங்கம்பண்ண இஸ்போல்
டிங்கையர் நயிற்றையர் தாவீத்தையர் மு
தலான பாதிரிமாரும் பிரசங்கத்துக்குச்சா
ர்பான சிலபொழிப்புகளைச் சொ ன பின்
பு கூட்டம மகிழ்ச்சியுடன் முடிந்தது. அ
ன்றைக்கு சடு பிள்ளைகளளவுக்குப் படிக்
க ஏற்றுகொள்ளப் பட்டார்கள் அப்போவ
ந்த பிள்ளைகளிற்சிலர் இப்பொழுது கச்சே

ரியிலும் மறுவிடங்களிலும் உத்தியோக மாகவிருக்கிருர்கள்.

யிரு. கட்டுவேலைகள்.

மேக்கிஸ் அய்யர் என்பவர் பிறப்பள்ளிக்கூடக்காரியங்களையுந் திருச்சபைக் கவ்வைகளையும் பள்ளிக்கூடக் கட்டுவேலைகளையும் பராபரித்துவந்தார் இப்போதிருக்கிற (Otly Hall) என்ற மேல்வீட்டையும் மற்றச்சாத்திரப்பள்ளிக்கூட அறைகளையும் அவர்கட்டுவித்தார். இந்தமேல்வீடு கட்டும்படி, முன்வந்துபோனவரேன்று சோன்ன இறிச்சேட் ஒற்லியென்ற நீதியிராசாத் தருமமாகத் தமது சோந்தப்பணங் கோடுத்தார்.

யிச. விநோதவேலைகள்.

அக்காலத்தில் தச்சர்கோல்லர் முதலான கம்மாளருக்குச் சித்திரமான வேலைகள்செய்யத் தெரியாது. அவர்களை அவர் தச்சன் மாலேன்று ஒருமால்கட்டி அதில்வைத்துத்தமது வீடுகளுக்குவேண்டிய இயன்னல் கதவு முதலியவைகளையும் மற்றுஞ்சித்திர வேலைகளையும் நன்ருகச்சேய்யப் பழக்கினதுமன்றி அவர்களுக்குச் சீமையிலிருந்து வந்த நல்லவாள் அரம் முதலியவைகளையு

ங்கொடுத்து உதவினார். இவர்களிலிரண்டு தச்சரும் ஒருகொல்லனும் நிபுணராகவந்து இப்போவிருக்கும் சித்திரவேலைகாரரையும் படிப்பித்துக் கொண்டார்கள். மேலுஞ் சகல கூலிக்காரரையும் சேர்த்து உச்சியா காலத்திற் கூட்டம்வைத்துப் புத்திசொல் லிச் செபம்பண்ணி விடுவார் இவர்கள் நோவாவின் பேழைக்கு உதவிசெய்தவர்க ளைப்போல உதவிக்காரராய் வந்தார்கள். மேலும் கூலிச்சனங் துட்டாப்புப்போட்டு மரங்களைக் காவுகிறதையும் தலைச்சுமைசுமக்கிறதையுங் கண்டு மாட்டு வண்டிலொன்று செய்விக்க யோசனைபண்ணி நிற்சிங்கமுதலியார் ஆறுமுகமென்பவர் ஒருமாட்டுவண்டில் வைக்க ஏவிவிட்டார். அப்போதுதான் சனங்கள வட்டுக்கோட்டையிலே மாட்டுவண்டில் வைக்கத்தொடங்கினார்கள்.

௪௫. பல்லாக்குக்காரரும் நாகபாம்பும்.

அக்காலத்தில் அய்யமாரும் துரைமாரும் ஊர்தியாகப் பல்லாக்கிலேறிப் போவார்கள் நல்ல இரதங்களும் இரதசாரதிகளுமில்லை ஒருமுறை பல்லாக்குக்காரர் பூரய்யனைக் காவிப்போகையில் ஒருநாகபாம்

புமுன்னிட்டுவர உடனே பல்லாக்கையிற
க்கி நாகத்தைக் கும்பிட்டார்கள் அப்போ
அய்யர் என்தாமதப் படுகிறீர்களென்க நாக
தம்பிரான் அய்யா கும்பிடுகிறோம் என்ரு
ர்கள். எங்கே தம்பிரான் என்று கேட்க
அவர்கள் நாகம் படமெடுத்து நிற்கக்காட்
டினார்கள் இச்சனங்கள் தங்களைக் கோ
ல்லுகிற பாம்பையும் வணங்குகிறார்களோ
என்று கேட்டதிசயப் பட்டார் இது தேல்
லிப் பழையில்நடந்தது.

யசு. கண்ணாடியும் மனிதனும்.

கண்ணாடிகள் படங்களின்னின்னவேன்
று அநேகருக்குத் தெரியாது அப்படி இரு
க்க மேக்ஸ்அய்யர் சிவர்ப் புறத்தில் தூக்கி
வைத்த முகக் கண்ணாடியொன்றை ஒரு
மனிதன் பார்க்க அதற்குள்ளே வேறே த
ன்னைப் போலொரு ஆள் நிற்கிறதாகக் க
ண்டு உள்ளே போக அய்யர் இங்கே என்
வந்தீர் என்று கேட்க இங்கே ஒரு ஆள்
இருக்கிறான். காணவந்தேன் என்க அய்
யரவனை யிங்கே காணவில்லை எங்கே நிற்
கிறானென்று கேக்கலிகோட்டிச் சிரித்துநீர்
போகலாம் என்றார்.

௰எ. உடுவிற் பெண்பிள்ளைத் தருமப்ப ள்ளிக்கூடம்,

இந்தப் பள்ளிக்கூடம் ௲௮௱௨௰௧ம் ஆண்டு ஆடிமாதம்வரையில் ஒருபிரதான பள்ளிக் கூடமாக உடுவிற் சேகரத்தில் ஸ்தாபிக்க ப்பட்டதென்று மேலே சொல்லப்பட்டது இதை முதல் உவின்சிலோ அய்யர் அம் மா பாரபரித்தார்கள். பின்பு இஸ்போல் டிங்கையர் அம்மா வசம் ஒப்புவிக்கப்ப ட்டது இதில் முதல் ௬௰ பிள்ளைகள் அள வுக்குப் படித்தார்கள் பின்பு வரவரத்தொ கை ௱ பேர்மட்டுக்குக் கூடினது பிள்ளைக ள்தமிழ்க்கல்விகளிலும் வேதாகமத்திலுஞ் சாத்திரங்களிலுஞ் சங்கீதராகத்திலும் இங் கிலீசுவாசிக்கப்பேச எழுதவுந் தையல்வே லைகளிலுந் தேறும்படிபடிப்பிக்கப்பட்டா ர்கள். இவர்களைவிசேஷமாகஇல்லாச்சிரம ஒழுக்கத்திலுஞ் சன்மார்க்க நடையிலுந்தெ ய்வபத்தியிலும் வளரும்படி படிப்பிக்கப் பட்டது இவர்கள்படித்து நற்குணசாலிக ளானல்த் தங்கள்தேசத்தின் இஸ்திரிசன ங்களுக்கும்பிள்ளைகளுக்கும் ஆத்துமரட்சி ப்புக்குக் காரணராக வருவார்களென்றநோ க்கமிருந்தது இப்பொழுது ௱௪௰ கிறிஸ்தமா ர்க்க மாதாமாரும் அவர்கள் பிள்ளைகளும்

அறிவாளிகளாய்த் தெய்வபத்தராக இருந்து நன்மைசெய்து வருகிறார்கள். இம்மாதாமாரிலனேகர் கிறிஸ்தபெற்றோரின்பிள்ளைகள். இவர்களுடைய ஆண்பிள்ளைகளிற் பலர், உபதேசிகள், போதகர்கள், வைத்தியர், உவாத்திமார், மற்றும் உத்தியோகத்தருமாகவிருக்கிறார்கள். இவ்விதமாக இவர்கள் மாதாமாரைப் படிப்பித்தது நன்மையாக முடிந்தது. இப் பள்ளிக்கூடத்தில் ௧௮௨௩ ம் ஆண்டு முதல் ௧௮௪௦ ம் ஆண்டு வரைக்கும்படித்தபெண்பிள்ளைகள் ௩௪௪, வரணியிற் பெண்பிள்ளைப் பள்ளிக்கூடத்தில் ௩௫ பெயர் படித்தார்கள். பிறப்பள்ளிக்கூடகளில் ௧௦௦௦ பெண்பிள்ளைகள் படித்தார்கள் ௧௮௨௪ ம் ஆண்டு பத்துப்பெண்பிள்ளைகள் படிக்கத் தொடங்கினார்கள். அன்றுதொடங்கி இன்றளவும்படித்தபெண்பிள்ளைகளின்தொகை எவ்வளவென்றுபார்ப்பீர்களாக. இத்தேசத்தின் பெண்பிள்ளைகள் சகலரும் இவர்களைப் போலப் படித்திருந்தார்களானால் எவ்வள்வு உத்தமம். பெண்பிள்ளைகளைப் படிப்பிக்கப்பிரியமில்லாதவர்கள் இனியாகுதல் படிப்பிக்க முயற்சி பண்ணுவார்களாக. எங்கள் அரசாட்சியாரும் இத்தேசத்தின் பெண்பிள்ளைக-

ள் கல்விகற்க வேண்டுமென்று நற்கருத்து க்கொண்டிருக்கிறார்களெனத் தெரியவருகிறது.

## Batticotta High School.

௰௮. தற்காலத்தில் வட்டுக்கோட்டையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற இங்கிலீஷ் வித்தியாசாலையைப் பற்றி.

வட்டுக்கோட்டையிலிருந்த அமெரிக்கன் மிசியோன் சாத்திரப்பள்ளிக்கூடம் நிறுத்தப்பட்ட பொழுது, ஒருபுது இங்கிலீஷ் வித்தியாசாலை ஏற்படுத்தப்பட்டது. ௲௮ம் ஆண்டு பங்குனி மாதம் உ௪ந் தேதி சுதேசிகளான சிலர் அதைத் துவக்கினார்கள். ஏறக்குறையப் பத்துவருஷமாய் நடைபெற்று வருகின்றது. இப்பொழுது எட்டு உவாத்திமார் ௱௫௰ பிள்ளைகளைப் படிப்பிக்கிறார்கள். வேதாகமத்தையும் அதற்குத் துணையான மறுகல்விகளையுந் தமிழ்நூல்களையும் இலக்கணம் இதிகாசம், பூமிசாத்திரம், வானசாத்திரம், கணிதம், வீசகணிதம், ரேகாகணிதம், முக்கோணசாத்திரம், அளவை, பிரபஞ்சநூல் முதலான பலசாத்திரங்களையும் படித்துவருகிறார்கள். இதுவரையில் இவ்விடத்திலே படித்துப்போன மாணாக்

கர் உசஎ, பேரென்ருெரு கணக்குண்டு. இவர்களில் உகூபேர் கிறிஸ்தவர்களானுர்கள் அவர்களிற் சிலர் விக்கிரகாராதனைக்காரருடைய பிள்ளைகள் அஞ்ஞானப் பிள்ளைகளுங் கிறிஸ்தபெற்ருரின் பிள்ளைகளுமாக உகூ இவர்களில் மூன்றுபேர் தவிர மற்றெல்லாருந் திருச்சபையோடே உறுதியாய் நிற்கிருர்கள். சுதேசிகளுடைய பராபரிப்பின் கீழுள்ள பள்ளிக்கூடமென்ருலும் இத்தனைபேர் கிறிஸ்தமார்க்கத்தை அனுசரிக்கவந்தது ஒரு விசேஷமான காரியம்.

இதிற்படித்தவர்களில் ரூஎ. பேர்வருஷவீதம் ருഠ பவுண் முதல் கருഠ பவுண் வரையுஞ் சம்பளம்பெறுகிருர்கள். அரு பேர் கஉ பவுண்முதல் ருഠபவுண் வரையும் கஅ பேர் கஉ பவுண்வரையுஞ் சம்பளம் பெறுகிருர்கள். ககூ பேர் வைத்தியத்தொழிலிலேற்பட்டிருக்கிருர்கள். ஒருவர் அப்புக்காத்துவேலை நடத்துகிருர். கஉ பேர் மரித்துப் போனுர்கள். சிலர் தங்கள் பெற்ருேராகிய தலைமைக்காறருக்கு உதவியாகவிருக்கிருர்கள். இப்பள்ளிக்கூடத்து மாணுக்கருக்குள்ளே கிறிஸ்தமார்க்க உபதேசிமார், வைத்தியர், நியாயதுரந்தரர், தெருக்கணக்கப்பிள்ளைகள், என்சினீர்மார், நில அளவைக்

காறர், சிருப்புமார், ஸ்தோர்க்கணக்கர், கிளாக்குகள் உவாத்திமார் ஆதியான உத்தியோகத்தர்களாகிச் சிலர் இந்தியாவிலும்,சிலர் இலங்கையிலும் இருக்கிறூர்கள். இப்படியே இன்னுமநேக வருஷங்களாய் இவ்வித்தியாசாலை தழைத்து அநேகருக்கு நன்மையாயிருக்க வேண்டுமென்றும், இங்கேபடிக்கிற மாணுக்கர் தங்களையுந் தங்கள் தேசத்தவர்களையும் இரட்சிப்பின்வழியில் நடத்த ஏதுவாயிருக்க வேண்டுமென்றும் மிக வாஞ்சையாயிருக்கிறேம்.

## American Mission Church.

௰கூ. யாழ்ப்பாணத்திலுள்ள அமரிக்கன் திருச்சபையைப்பற்றி.

குருமார் வந்ததுவக்கத்தில் இத்தேசத்தவர்களில் ஒருவருமிந்தச் சபையிற் சேர்ந்ததில்லை. கிறிஸ்துமார்க்கம் ஒரு நூதனமான மார்க்கமாயிருந்தது. குருமார் போதித்துவந்ததேயன்றி இந்தமார்க்கத்தை அநுசரிக்க யாதொருவரைக் கட்டாயப்படுத்தினதில்லை. யாதொருவர் மெய்யான கிறிஸ்த்தவர்களென்ற அத்தாட்சி தங்கள் மனதிற்படுமட்டும் அவர்களைச் சபைக்குச்சேர்க்கச் சம்மதித்ததில்லை. இப்படியிருந்துவரு

ங்காலத்தில் கவுரியேற்பிள்ளை, நீக்கிலாசுப்
பிள்ளையென்ற இருவரும் வேதாகமத்தை
வாசித்தும் படித்தும் பிரசங்கத்தைக்கேட்
டும் பரிசுத்தாவியானவரினருளினால் மன
ந்திரும்பினவர்களாய் இருந்தார்கள் கவுரி
யேற் பின்ளை மேலே சொல்லப்பட்டபடி
கஅகக ஸு ஐப்பசி மாதம் கO ந் உ, நீக்
கிலாசுப்பிள்ளையென்பவர் அந்தமாதம் ஙக
ந் தேதியிலுஞ் சபையிலே சேர்ந்தார்கள்.
கவுரியேற்பின்ளை கொழும்பிலேயிருந்து வ
ந்தவரானபடியால் அவரைப்பற்றிமிகவுஞ்
சனங்கள் விபரமாய்ப் பேசாமல் நீக்கிலா
சுப்பிள்ளையை இவர்கொழுத்த சைவனாயி
ருந்து விபூதிபூசிக் கோவிலிலே புராணம்
வாசித்துவந்தவர் கிறிஸ்து மார்க்கத்திற்
சேரவந்த காரணமென்னவென்று பேசிக்
கொண்டார்கள். இப்படியிருக்க இவர்க
ளுக்குப்பின்பு ரு பேர் சபைக்குச்சேரத் த
குமானவர்களென்றுதீர்மானிக்கப்பட்டது
அவர்கள் சபைக்குச்சேரவிருந்த ஞாயறு
க்கு முதல்நாள் அவர்கள் உறவர்வந்து சே
ரப்படாது என்று தடுத்தார்கள். அதினால்
அவ் ஐவரில் மூவரும் பின்போட மேஸ்த
ர் யோடன், ஙயில்சு என்னுமிருவருந் தயிரி
யமாக நாங்கள் கிறிஸ்தவர்களாவோமென்

றுதிடவரமாய் நின்றார்கள். இவர்களில் முன் பெயர்வழிக்காரனானவருடைய மாதா ஐயரிடம்வந்து என்மகனை உங்கள்மார்க்கத்திற் சேர்க்கப்படாது என்றார். அதற்குமகன்கேட்கவில்லை. மற்றவரையுஞ் சேராதபடிபலருந்தடைசெய்தார்கள். அதுவும்வாயாமற்போயிற்று. அதைக்கண்டு இவர்களைத்திருப்பக்கூடாது, பாதிரிமார் பிணஊண்கொண்டுவந்து கொடுக்கிறவர்கள் அதையுட்கொண்டவர்கள் அந்தமார்க்கத்திலேமயங்கிப் போவார்களென்று ஒருவன் சொன்னான், அவனும் பின்பு கிறிஸ்த்தவனானான் இவர்களிருபேருஞ் சேர்ந்த அன்று தெல்லிப்பழைக்குச்சேர்ந்த போதியமனிதரும் மற்றவர்களும் பார்க்கவந்து, இவர்களும் அய்யமாரும் திருவிருந்தனுபவிக்கக்கணடு சிரித்தார்கள். கொஞ்சக்காலமாக ஊருக்குள்ளே இதுபெரிய இகழ்ச்சிபோலத் தருமச்சோறு தின்கப்போன இரண்டுபோடியர்கள் பாதிரியுடைய வேதமாகப்போய்விட்டார்களென்று கதைநடந்தது.

ஆனாலும் அதுமுதல் சறுவ வல்லமையுள்ள பரிசுத்தாவியானவர் பாவிகளைக் காலத்துக்குக்காலம் மனந்திரும்பப்பண்ணி இரட்சிக்கச் சித்தமானார். குருமாரிருக்குமி

டங்களிலே சனங்களுக்குள் பெரிய தேவ எழுப்புதல் உண்டானது.

ஒருமுறையிலே குருமாரும் அவர்கள்மனேவியருந் தெல்லிப்பழையில்வந்து செபக்கூட்டம் வைத்துப் பரிசுத்தாவியானவரின் அருளுக்காகக் கண்ணீருடனே செபம்பண்ணக் கண்டவர்களில் ஒரு மனிதன் ஆச்சரியத்துடனே அதேன்பாதிரிமாரும் அம்மாமாரும் அழுதகண்ணீருடனே அறையிலிருக்கிருர்கள் ஊரத்தாரில் ஆரோ இறந்துவிட்டார்களாக்கும் என்று கேட்டான்.

இவ்விதமாகப் பெந்திக் கோஸ்தென்னும்நாளிற்போல கஅ௨௪ ம் ஆண்டு சண்டிலிப்பாயிலே ஒருபெரியபந்தல், கோவில்போலக்கட்டப்பட்டுக் கூட்டம் வைக்கப்பட்டது. அன்றைக்கு ௯௦ பெயரளவுக்குச் சபைக்குச் சேர்ந்தார்கள். வெகுசனம் வந்தார்கள். வட்டுக்கோட்டையிற் பிறந்த சாமுவேல் வேலுப்பிள்ளை என்பவர் அந்நேரத்திற் சபைக்குச்சேரப் போகிருரென்ற சத்தம் எட்டித் தமையனும் இனத்தவர்களுந் தடைசெய்யவும் குழப்படிபண்ணவும் வந்தார்கள். அதை அறிந்த குருமார் மல்லாகம்மஸ்த்திரத்துக்கு அறிவிக்க அவர்மயில்வாகனமுதலியாரையுஞ்சேவகரையும் அச்

சரிக்கைபண்ணஅனுப்பினர். அவர்கள்வ
ந்துவிதானேமாருடன்அச்சரிக்கைபண்ணி
பாதுகாத்துக்கொண்டார்கள். அப்போமயி
ல்வாகனமுதலியார்மார்க்கத்திற்சேராதிருக்
தும்உதவியாகவிருந்தார் "இராசாக்கள் உ
ன்னேவளர்க்குந் தந்தைகளும்இராசஸ்திரி
கள் உன்னைத்தாயர்களுமாவார்கள்" என்
று வேதத்திலே சொல்லப்பட்டபடி கோ
ட்டிலுள்ள நீதவான்களும் மயில்வாகன
முதலியார் முதலான உத்தியோகத்தருந் தி
ருச்சபைவளர்த்திக்கு அனுசாரிகளாகவிரு
ந்தார்கள். பினபு மயில்வாகன முதலியா
ரும் வேதாகமத்தை வாசித்தும் ஆராய்ந்து
ங் குருமாருடைய பிரசங்கங்களைக் கேட்
டுங் கிறிஸ்துமார்க்கம் உண்மையென்று சா
தித்துக் குணப்பட்டார். இவர் குணப்பட்
டதினலே இவர் மகாபெரிய குபேரன் சா
திமான் யாதொரு மிடிமையில்லாதவர் ஏ
ன் கிறிஸ்த்துமார்க்கத்திற் சேர்ந்தாரென்று
சனங்களுக்குள்ளே பெரிய பிரமிப்புண்
டாயிற்று. அவரை அவருடைய சுற்றத்தவ
ர்களும் மனைவியும் வெறுத்துப் புத்தியீன
னென்று நினைத்து அவரை விட்டுப் பிரிந்
தார்கள். அவரைப் பற்றிப் பிரயோச
னம் பெற்றுவந்த புரோகிதர் குருக்கள்

மார் இவர்களுந் துக்கப்பட்டார்கள். இவருடைய உறவரில் படிப்பாளிகளானவர்களும் வேதத்துக்கு விரோதமாய்க் கும்மிமுதலிய பாடல்களைப் பாடினார்கள். இவைகளுக்கெல்லாம் அவர் அஞ்சாமல் மரணபரியந்தங் கிறிஸ்தவனாக நடந்தார். இவ்விதமாகச் சபைக்குச்சேர்ந்த உடுவில் உபதேசியார், சந்திரசேகரர், சால்சு வேலுப்பிள்ளை, முதலானவர்களுக்கும் வேறேசில பேருக்கும் நடந்தது அப்படியிருந்தும் அவர்களும் பின்வாங்காமற் கிறிஸ்த்தவர்களாக நடந்துவந்தார்கள். இவர்களைப்பற்றித் தனித்தனியே விரிவாகப் பேசினால் மிகப்பெருகும்.

இந்த மிசியோனுக்குச் சேர்ந்த ஒன்பது திருச்சபைகளிருக்கின்றன. சபையுண்டான காலந் துவங்கித் தற்காலம் வரைக்குஞ் சபையிற் சேர்ந்தவர்கள் சூஎக பேர். கவ்சூடு ம் வருட முடிவில் சபையிற் சேர்ந்தவர்களாகவிருக்கிறவர்களின் தொகை சடுள, இவ்விதமாகப் பராபரனுடைய இராச்சியம் வரவரப் பரிபாலனமானது. வானம் பூமி அழிந்தாலும் நமதுவார்த்தை அழியாதேன்று கடவுள்சொல்லுகிறார்.

## உயு. சுவிசேஷ சங்கம் — Native Evangelical Society.

இத்தேசத்திற் சுவிசேஷகாரியத்தைப்பற்றி எந்த நற்கிரித்தியங்களையியற்றியுந் தருமசங்கங்களில்லாதிருந்தாற் காரியமொன்றும் வாயாதென்றகருத்தைக் குருமார்யோசிக்க அதைப் பூரையர் வெளிதிறந்து நயில்சுப் பிரசங்கியார் யோசுவாப் பிரசங்கியார் முதலானவர்களிடம் இந்த ஊர்க்கிறிஸ்த்தவர்களுக்குள் ஒரு தருமசங்கம் ஸ்தாபிக்க முயற்சி பண்ணுங்களென்று சொன்னார். அவர்கள் மறுபேருடன் யோசித்து இவர்களிருவருமிச்சங்கத்துக்கு ஆதிகாரணராகி தூஅகூஉ ம் ஆண்டு வைகாசிமாதம் உசங் வ உடுவிலிலே ஒரு சுவிசேஷசங்கம் வைக்கப்பட்டது அதில் நயில்சுப்பிரசங்கியார் சங்கத்தலைவனாகவும் யோசுவாப் பிரசங்கியார் எழுத்துக்காரியஸ்தனாகவும் வேறேசிலர் மற்றுமுத்தியோகத்தராகவும் நியமிக்கப்பட்டார்கள் அன்றுமுதல் இன்றளவும் கூச வருடக்காலமாக அந்தச்சங்கம் தழைத்து நடைபெற்றுவருகிறது. இதின் தற்காலச்சங்கத்தலைவன் மேஸ்தர் ஆணல்ட் சதாசிவம் பிள்ளையென்பவரே இச்சங்கம் அமரிக்கன்போட்சங்கம் போல விருத்தியாவதாக.

## யாழ்ப்பாணத்துக்கு வந்த அமரிக்கன் மிஷனரிமாரில் பலரையும் பற்றிய பேரழிப்பு.

க. பூரையரைப்பற்றி.—Rev. D. Poor.

இவர் ௲அ௱க௬ம் ஆண்டு ஐப்பசிமாதம் கரு௩் தேதி தெல்லிப்பழைக்குவந்து அவ்விடத்திற் தமது போதகத்தொழிலை நடத்தி ௲அ௨௰ம் ஆண்டு வைகாசிமாதம் க௬௩் தேதி வட்டுக்கோட்டைக்குச் சாத்திரப்பள்ளிக்கூடத்தலைவராய் அனுப்பப்பட்டு அங்கேயுந் தமது ஆசிரியத்தொழிலை நடத்தினர். பின்பு மதுரை மிசியோனுக்குக் குருவாக ௲அ௱௬ம் ஆண்டு மார்கழி மாதம் ௬௩் தேதி அனுப்பப்பட்டு அங்கேயுந் தமது போதகத்தொழிலை நடத்தி வருகையில் ௲அ௪க ம் ஆண்டு புரட்டாதி மாதம் உ௨௩் தேதி தெல்லிப்பழைக்கு அனுப்பப்பட்டு அவ்விடத்திலிருந்து ௲அ௪௮ம் ஆண்டு மாசி மாதம் உ௬௩் தேதி அமரிக்காவுக்குப் போய் மறுபடி திரும்ப யாழ்ப்பாணம்வந்து தமது குருத்தொழிலை மகா விவேகத்துடன் நடத்தி ௲அ௫௫ம் ஆண்டு தமது பரம குருவினிடம் பரலோகஞ் சேர்ந்தார். இவர் யாழ்ப்பாணத்தில் வந்த ஆதி குருமா

ரில் ஒருவராயும் மிசியோன் காரியங்களுக்கெல்லாம் அத்திவாரம் போட்டவராயும் நன் முன் மாதிரிக்காரனுமாயிருந்தார். மேலேசொல்லப்பட்ட சரித்திரத்தினுற் பூரையரின் தன்மைவிளங்கும். மேலும் அவர் தமிழில் உண்டுபண்ணி அச்சடிப்பித்தகிரகணமோசம் நினைப்பூட்டுப்பத்திரம் என்னும் புத்தகங்களையும் வாசித்துப்பார்ப்பீர்களாக. அன்றியும் அவரிடத்திற் படித்த மாணுக்கரும் அவருடைய சீவனுள்ள நினைப்பூட்டுப் பத்திரங்களானுர்கள். இவர்கள் அவரை நினைக்கும்போது இலீஷா என்பவன் தமது குருவாகிய இலிசாச் சாகாமல் வானத்துக்கேறுகையில் அவரைக் கண்டு என்பிதாவே "என்பிதாவே இஸ்ரவேலரின் இரதமே அவர்கள் குதிரைவீரரே" என்று புலம்பினதுபோலப் புலம்புவார்களேன்பதற்குச் சந்தேகமில்லை.

## ௨. மேக்கிஸ் ஐயர்.-Rev. B. C. Meigs.

இவர் ௲௮௱௰௭ ம் ஆண்டு ஆனி மாதம் ௪ந் தேதி வட்டுக்கோட்டைக்குத் தமது சமுசாரத்துடன் வந்து ௲௮௱௨௰ ம் ஆண்டு மாசி மாதம் ௨௰௨ தேல்லிப்பழைக்குக் குருவாகப்போய் அங்கிருந்து ௲௮௱௪௰ ம் ஆண்டு

தை மாதம் ௰௬ந் தேதி தமது சமுசாரத்துடன் அமரிக்காவுக்குப்போய்ச் சமுசாரத்தை அங்கேவிட்டுத் தனித்து ௲௮௱௨௰ம் ஆண்டு சித்திரை மாதம் வட்டுக்கோட்டைக்குவந்து, ௲௮௱௩௰ம் ஆண்டு சித்திரை மாதம் ௰௨ந் தேதி அவ்விடத்தை விட்டுச் சாவகச்சேரிக்குப் போய், அவ்விடத்திலிருந்து ௲௮௱௩௬ம் ஆண்டு சித்திரை மாதம் ௨௮ந் தேதி மானிப்பாய்க்குவந்து மானிப்பாயிலிருந்து தெல்லிப்பழைக்கு ௲௮௱௩௯ம் ஆண்டு பங்குனி மாதம் ௮ந் தேதி போய் அங்கே ௲௮௱௫௭ம் ஆண்டளவுமிருந்து, பின்பு அமரிக்காவுக்குப்போய் அங்குஞ் சில காலமிருந்து பின்பு தேக வியோகமானார். இவர் சரித்திரம் முன் விரிவாகச் சொல்லப்பட்டபடியால் இங்கே பேசவில்லை.

### ௬. இறிச்செட்டையர், Rev. James Richards.

இவர் முதன்முதல் மேக்கிஸ் அய்யருடன் வட்டுக்கோட்டையிலிருந்து தேவ ஊழியத்தை நடத்திப் பின்பு உவாறன்பாதிரியாருடன் நன்நம்பிக்கையின்முனை என்று சொல்லப்படும் கேப்புக்குப்போய் அங்கே

உவாறன் பாதிரியாருடைய மரணகாலம் மட்டும் இருந்து பின்பு வட்டுக்கோட்டைக்குவந்து அங்கிருந்து தெல்லிப்பழைக்கு கூஅஉக ம் ஆண்டு ஆனிமாதம் போயிருந்து இவர்தினத்துன்பக்காரணத்திஞல் துன்பம்வரவர நெருக்கி கூஅஉஉ ம் ஆண்டு ஆவணிமாதம் கூங் தேதி மரித்துவிட்டார் இவர் மகாபெரிய அறிவாளியுந் தெய்வயத்தனும் வயித்தியனுமாயிருந்தார்.

சு. உவின்சுலோ அய்யர், Rev. Miron Winslow.

இவர் கஅஉ0 ம் ஆண்டு ஆனிமாதம் உடுவிலுக்கு வந்து தமது குருவுத்தியோகத்தை நடப்பித்து வருகையில் அவருடையயாரி மரித்துவிட்டார். மறுபடியும் அவர் கஅகூகூ ம் ஆண்டு புரட்டாதி மாதம் கஅங் தேதி உடுவிலை விட்டு அமரிக்காவுக்குப்போய் கஅகூகூ ம் ஆண்டு வைகாசிமாதம் யாழ்ப்பாணஞ் சேர்ந்து கஅகூகூ ம் ஆண்டு ஆனிமாதம் இரண்டாந் தேதி சென்னபட்டினத்துக்கு ஒரு மிசியோன்தானத்தை ஸ்தாபிக்க அனுப்பப்பட்டு, அங்கிருந்து கூஅசூசு ம் ஆண்டளவில் சரீரசுகமில்லாததிஞல் தமது சென்னதேசத்துக்குக்

கப்பல் யாத்திரைபண்ணிப் போகையில்
வழியிலே தேசவியோகமானர் இவர் நு
ட்பமான புத்திமானும் ஆழமான வேதசா
ஸ்திரியுந் தாராளமான தருமக்குணமுள்
ளவருமாயிருந்தார். இவராலே பற்பல உ
பதேசிகளும் பிரசங்கிகளும் படிப்பிக்கப்
பட்டு உபதேசத்தோழிலில் வல்லவர்களா
ஞர்கள். அவர்தான் யோசுவாப் பிரசங்கி
யார், நயில்சுப் பிரசங்கியார், நாத்தானியேல்
உபதேசியார், முதலானவர்களை வேதசாஸ்
த்திரத்தில் படிப்பித்தது. அவருடைய ந
ற்கிரியைகளை எடுத்துப் பேசப்போனுல் மி
கவும் பெருகும். இவருண்டுபண்ணின
அகராதியும் இவரை விளக்கும்.

ரு. இஸ்க்கடர் அய்யர். Rev, John Scudder.

இவரைப்பற்றி மேலே சோல்லியிருக்
கிறபடியால் விபரமாய்ப்பேசாமல் விடுகி
ரேம். இவர் முதன்முதற் தேல்லிப்பழை
யில் பூரையருடன் சிறிதுகாலம் வாசம்ப
ண்ணிப் பின்பு, ௲அ௨0 ம் ஆண்டு ஆனிமா
தம் அ ந் தேதி பண்டத்தருப்புக்குப்போய்
அங்கே தமது போதக வயித்தியத் தோழி
ல் இரண்டையும் நடத்தி, ௲அகூ ம் ஆண்

ாடு ஐப்பசிமாதஞ் சாவுகச்சேரிக்குக் குருவாக அனுப்பப்பட்டு அவ்விடத்திலிருந்து ௲அ௱௬௯ம் ஆண்டு ஆனிமாதம் ௫ங் தேதி சென்னபட்டினதக்கு உவின்சுலோ அய்யருடன் குருவாகப்போய் பின்பு சரீரசவுக்கியவீனத்தினால் நன்நம்பிக்கையின் முனையென்று சொல்லப்பட்ட கேப்புக்குப்போய் அங்கே தேகவியோகமானார்.

## ௯. ஊடுவாட் ஐயர், Rev. H. Woodward.

இவர் முதன்முதல் வட்டுக்கோட்டையிலிருந்து பின்பு ௲அ௱உ௦ம் ஆண்டு மார்கழிமாதம் ௬ங் தேதி மானிப்பாய்க்கு அனுப்பப்பட்டு மறுபடியும் ௲அ௱உக ம் ஆண்டு ஆவணிமாதம் உஉங் தேதி வட்டுக்கோட்டைக்குப்போய் அவ்விடத்திலிருந்து ௲அ௱உ௩ம் ஆண்டு தைமாதம் ௩௦ங் தேதி தெல்லிப்பழைக்குப்போய் அவ்விடத்தில் வட்டுக்கோட்டையிற் சாத்திரப்பள்ளிக்கூடத்துக்கு ஆயத்தமாக ௪உ௦ பிள்ளைகளளவுக்கு இங்கிலிசுபடிக்கக் காரணராயிருந்து மறுபடியும் ௲அ௱உ௯ம் ஆண்டு சித்திரை மாதம் மானிப்பாய்க்கு வந்து அங்கிருந்த

௲௮௱௰ம் ஆண்டு பங்குனி மாதம் ௧௰ந் தேதி வட்டுக்கோட்டைக்குச் சென்று அங்கே சரீரசுகமில்லாதவராயிருந்ததினால் நீலகிரிமலைக்குப்போய் ௲௮௱௪ம் ஆண்டு ஆவணிமாதம் கோயம்புத்தூர் என்னுமிடத்திலே வரும்போது காலஞ்சென்றுவிட்டார் இவர் பிள்ளைகளைப் படிப்பிக்கிறதில் மகா உபாயமுள்ளவரும் பிரசங்கம் பண்ணுவதில் எவர்களுங்கேட்க விரும்பப்படத்தக்கவரும் தருமத்தில் முதல் வள்ளலென்று சொல்லப்படத் தகுமானவருமாயிருந்தார். இவர்தான் சமதுபயணத்தில் மதுராபுரிக்குப்போய் அவ்விடத்தின் சீர்கிருபாகத்தைக்கண்டு யாழ்ப்பாணஞ் சென்று தமது சகோதரரான குருமாருடனே யோசனைபண்ணிக் குருமார் அவ்விடம்போகக் காரணராயிருந்தது. இப்பொழுது கோட்டுத்துப்பாசியாயிருக்கிற தில்லைநாயக முதலியார்தான் இவருக்குப்பிரதான உதவிக்காரனுயிருந்தவர்.

ஊடுவாட் அய்யருடைய சரித்திரத்தை விரிவாக அறிய விரும்புகிறவர்கள் அவரைப்பற்றித் தமிழிலே அச்சடிக்கப்பட்டிருக்கும் புத்தகத்தைத் தேடிவாசிக்கலாம்.

ஸ்ப்போல்டிங் ஐய்யர்.—**Rev. Levi Spaulding,**

இவர் அமரிக்காவை விட்டுவந்து சிறிது நாட்களாகத் தெல்லிப்பழையிலிருந்து உடுவிலை வசதிப்படுத்திக்கொண்டு ௲௮௨௦ ம் ஆண்டு ஆனிமாதம் உடுவிலுக்குவந்து அவ்விடத்திலே உவின்சுலோ ஐயரும் இவருமாக ஊர்ப்பள்ளிக்கூடங்களையுந் தருமப்பள்ளிக் கூடத்தையும் இஸ்தாபித்துப் பராபரித்துச் சனங்களுக்குப் பிரசங்கம்பண்ணிவந்தார்கள்.

பின்பு ௲௮௨௧ம் ஆண்டு ஆனிமாதம்மானிப்பாய்க்குவந்து வீடுகளைக் கட்டுவித்து ஊர்ப்பள்ளிக்கூடங்களுந் தருமப்பள்ளிக்கூடமும் இஸ்த்தாபித்துத் தருமப்பள்ளிக்கூடத்தில் எட்டுப் பிள்ளைகளும் படிக்கச் சேர்ந்தார்கள். இவ்விடத்திலுள்ள செல்வாக்கான மனிதருடனே முகப்பழக்கமாகிக் குறிச்சிக்குக் குறிச்சிபோய்க் கூட்டம்வைத்துப் புத்திசொல்லிவந்தார்.

இவர் மானிப்பாய்க்கோவிலுக்கு அணித்தாயிருக்கிற பிள்ளையார்கோவிலுக்குப் பலமுறைபோய்ச் சனங்களுடைய செய்காரியங்களைக் கண்டு அவர்கள் பிரயோசனத்துக்காகத் தாம் தமிழ்ப்படிக்கவேண்டுமே

ன்று கருதித் தமிழ்ப்படிததுச் சற்றே தேறி த் தமிழருடனே பேசப்பழகியபின் யாழ்ப் பாணமாகாணத்தைச்சேர்ந்த பல இடங்க ளுக்கும் கால்நடையாகவும் வாகனங்கள் மேலாகவும் போய்ச் சுவிசேஷத்தைப் பிர சித்தப்படுத்திவந்தார்.

இவர் ௲௮௨௩ம் ஆண்டு ஆவணிமீ. ௰௪௳. தெல்லிப்பழைக்குக் குருவாகப் போய் அங்குள்ள புறப்பள்ளிகளையும் இ ங்கிலிசுப்பள்ளியையும் விசாரித்ததுமன்றி ஊருக்கூர் பிரசங்கமும்பண்ணிவந்தார்.

ஸ்போல்டிங்கு அம்மா அவர்களுக்குச் சீரசுகமில்லாததினல் ௲௮௩௪ம் ஆண்டு ஐயரும் அம்மாவும் அமரிக்காவுக்குப்போ ய்ச் சற்றே சுகமடைந்து ௲௮௩௬ம் ஆண் டு சிததிரை மாதம் ௰௬௳. யாழ்ப்பாணஞ் சேர்ந்து தங்கள் சேகரததின் ஊழியத்தை நடத்திவருகிறார்கள்

இந்த ஐயர் ஊர்ச்சனங்களுடனே ஊ டாடினதினல் சுத்த தமிழனைப் போலப் பேசவும் எழுதவும் பழகிப் பிள்ளைகளுக் குப்பள்ளிக்கூடப்புத்தகங்கள், சன்மார்க்க ப்புத்தகங்கள் பலவகைத்துண்டுப்புத்தகங் கள் இங்கிலிசுந் தமிழுமாகப் பதிக்கப்பட் ட அகராதி தமிழகராதி வேத உரிச்சொல்

அகராதி மோட்சபிரயாணம், பிரார்த்தனைக் கீதங்கள் முதலானவைகளைச் செய்ததும ன்றி வேதப்பகுதிகள் சென்னைபட்டினத் திற் பதிக்கப்பட்ட முழு வேதாகமப்புத்த கம் என்பவைகளை ஸ்பயிற் ஐயர், பேர்சி வல் ஐயர் முதலிய ஐயமாருடனே கூடியு ஞ் செய்து நிறைவேற்றினார்

இப்போழுதும் அவர் தமது குருவுத்தியோ கத்தை நடத்தியும் புத்தகங்களை உண்டுப ண்ணிக்கோண்டும் பெண்பிள்ளைத்தருமப் பள்ளிக்கூடத்தைப் பராபரித்துக்கோண் டும் வருகிறார். அவரையும் அவர் பாரியை யும் இத்தேசத்தாரின் நன்மைக்காகக் கட வுள் பூரணஆயுள்மட்டும் காப்பாற்றப் பி ரார்த்தித்துக்கோள்வோமாக.

## ௪. கோய்சிங்றன் ஐயர்.—Rev. H. R. Hoisington.

இவர் ௲௮௱௩௰ ம் ஆண்டு ஆடிமாதவ ரையிலே அமரிக்காத்தேசத்திலிருந்து கப் பலேறி அந்தவருடம் ஐப்பசிமீ. ௨௪௳. யாழ்ப்பாணம் வந்து முதன்முதல் மானிப் பாயிலிருந்து பின்பு ௲௮௱௩௰ ம் ௵. வை காசி மாதம் ௰௪௳. மதுராபுரியிலே ஒரு மி

சியோனை இஸ்தாபிக்கப்போய் அங்கே சி
றிதுகாலமிருந்து பின்பு ௧௮௩௯ம் ஸூ.
தை மீ ௨௯௨. வட்டுக்கோட்டைக்கு வ
ந்து பூரையருடைய இடத்துக்குச் சாத்திர
ப்பள்ளிக்கூடத்தலைவராயிருந்து வெகு மா
ணாக்கரைத் திறமாய்ப்படிப்பித்துப் பின்பு
தமக்குச் சுகம்போதாததினால் ௧௮௪௨ம்
ஸூ தை மீ. யாழ்ப்பாணத்தை விட்டு
அமரிக்காவுக்குப்போய் மறுபடியும் ௧௮௪
௪ம் ஸூ. ஐப்பசி மீ. ௩௨ வட்டுக்கோ
ட்டைக்கு வந்து அங்குள்ள வித்தியாசாலை
யிலே தலைவராகவிருந்து அதை நடப்பித்து
வருங்காலத்தில் மறுபடியுஞ் சுகவீனமுள்
ளவராகி அமரிக்காவுக்குப்போய்ச் சற்றே
சுகமடைந்தவராய்த் தமது குருவுத்தியோ
கத்தை நடத்திவருகையில் துன்பக்காறனா
கி இகத்தைவிட்டுப் பரலோகஞ்சேர்ந்தார்.
இவர் பற்பல பாஷைகளை அறிந்தவரும்
பெரிய சாத்திரியுமாகவிருந்தார். தமிழ்ச்
சோதிடத்தையும் முக்கோணசாத்திரத்தை
யும் ஆராய்ந்து இங்கிலிஸ்படுத்தினார். தமி
ழர் இகபரகாரியமிரண்டிலும் மிகவும் உ
யர்த்தப்பட்டுச் சீர்திருத்தமுள்ளவர்களாக
வரவேண்டுமென்ற அவா அவரிலே மிகவு

மிருந்தது. அவரை இளந்துவிட்டது இத் தேசத்தாருக்குப் பெரிய நட்டம்.

கூ. உவாட்டையர் —Rev. N. Ward. M. D.

இவர் ஒரு வயித்தியன் இவர் கூவா ஙஙம் ௵ ஐப்பசி மாதம் உ௯௳ ஒசின் றன் ஐயருடனே யாழ்ப்பாணம்வந்து வட்டுக்கோட்டையிற் சாத்திரப்பள்ளிக்கூடத்துக்கு இரசவாத ஆசிரியரும் சாதாரணவயித்தியருமாகிக் கோசின்றன் ஐயருடனே சகவாசராய் வட்டுக்கோட்டையிற் தங்கினர். இவர் கூவுாசகூம் ௵. மார்களி மாதம் தமது பாரிக்குச் சுகமில்லாததினல் யாழ்ப்பாணம்விட்டு அமரிக்காவுக்குப்போய் அங்கே சிறிதுவருடக்காலமிருந்து குருப்பட்டமும்பெற்று வயித்தியருங் குருவுமாகச் சங்கத்தாரால் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டுத் தமது பாரியுடனே சமுத்திரயாத்திரைபண்ணிவருகையிற் சடுதியான துன்பம்வந்து கூவுாகூயம் ௵ தேகவியோகமானர். அவருடைய பாரி பிரியபத்தாவைச் சமுத்திரயாத்திரையில் அதிசீக்கிரம் இளந்து யாழ்ப்பாணம்வந்து வட்டுக்கோட்டையிலே பெண்பிள்ளைகளைப் படிப்பித்ததுமன்றிக் கிட்டின கிராமங்களுக்குப்போ

ய் அங்குள்ள ஸ்திரிசனங்களுக்கு வேதத்தைப் போதித்துச்சிறிதுகாலமிருந்து கூஹூரா கூசம் ஹூஸ. யாழ்ப்பாணம்விட்டு அமரிக்காவுக்குப்போய்விட்டார். இந்த ஐயருக்குப் பிரதான உதவிக்காரராகவிருந்தது வோல்க்கு முருகேசபிள்ளையும் இஸ்கோற் சின்னத்தம்பியாருமே. மேலும் உவாட்டையரும் அம்மாளும் வைத்துப்படிப்பித்த இங்கிலீசு ஆயித்தப்பள்ளிக்கூடத்தில படித்த வட்டுக்கோட்டையிற் பிள்ளைகளிற் பலருந்தான் சாத்திரப்பள்ளிக்கூடத்தில் அவருடைய உ.தவியைக்கோண்டு சேர்ந்து படித்துக் கண்டி முதலான இடங்களிற் பெரிய உத்தியோகத்தராயும் செல்வாக்குள்ளவர்களாயும் நிற்கிறுர்கள். அவர்கள் யாவரும் மிசியோனுக்கு மிக உதவிக்காறராய் இருப்பார்களேன்று காத்திருக்க நியாயம். உவாட்டையர் மகா மவுனியும் அடக்கமுள்ளவரும் ஆராய்வுள்ள வயித்தியனுமாயிருந்தார். இவர் சுரம் முதலான வியாதிகளை மாற்ற மகாகெட்டிக்காறன். இவரிடத்தில் வயித்தியங்கற்ற எவேட்சு கதிரவேலுப்பிள்ளை, கனகசபாபிள்ளை, கூல்ட்டு வைத்தியர் முதலானவர்களில் அவரிடத்திற் படித்த திறமையைக் காணவும் உவா

ட்டையர் நன்மை செய்வதைப் பற்றிச் சொல்வது கொஞ்சம் செய்வது அதிகமாக யிருந்தது அவருடைய வயித்தியசகாயத் தினுற் சில துரைமக்கள் முதலாய்க் குரு மாருக்கு அநுசாரிகளானுர்கள்.

ய. மயினர்த்துரை—E. S. Minor, Esq.

இவர் கூ௲அங௯ ம் ௵. பங்குனி மாதம் யாழ்ப்பாணம் வந்து மானிப்பாயிலே அச்சுக்கூடத்தலைவராகப் பலவருடக்காலமாகவிருந்து அநேக வேதபுத்தகங்களையும் சிறுபுத்தகங்களையும் பள்ளிக்கூடப்புத்தகங்களையும் அகராதிகளையும் புதினபத்திரிகைகளையும் அச்சடிப்பித்துப் பிரசுரம்பண்ணிப் பின்பு அச்சுக்கூடத்தை வேணல் ஐயர் பொறுப்பில் விட்டுத் தமது தேசத்நுக்குப் போய்விட்டார். இவர் குருவாகவிராதிருந்தும் பிரசங்கத்திலே யூகியும் புத்தி ஆலோசனைகளிற் கெட்டிக்காரனுஞ் சனங்களுக்கு மகா நல்லுபகாரியுமாகவிருந்தார்.

யக. மிஷனரி அம்மாமார்—Missionary Ladies.

மிஷனரிமார் மாத்திரமல்ல அவர்கள் துணைவியரும் இத்தேசத்தின் சனங்களின்

நன்மைக்காகப் பிள்ளைகளைப் படிப்பித்து
ம் அவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுத்
தும் பெண்பிள்ளைகளுக்குத் தையல்வே
லைபழக்கியும் துன்பக்காரரைப் பராபரித்
தும் ஸ்திறிசனங்களுக்குக் கூட்டம்வைத்
துப் போதித்துத் தங்கள் பத்தாக்கள் அந்
தந்தக்காரியங்களைப் பராபரிக்க அவர்களு
க்கு எழுத்துக்காறராக உதவிசெய்தும்வந்
தார்கள். அவர்கள் பத்தாக்களிற் சிலர்
தீயமனிதர்பேரிலே பொறுமைகொள்ள
எதுவாயிருந்தவேளையில் அவர்கள் பொறு
மையாயிருக்கப் புத்திசொல்லியும் செபம்
பண்ணியும் அனுதாபப்பட்டும் வந்தார்க
ள். இவர்கள் சொன்ன புத்தி உத்தமமெ
ன்று பத்தாக்கள் அறிந்து அவர்களிடத்தில்
ஆலோசனைக்கு வருவார்கள். எஸ்தர் எ
ன்பவள் யூதச்சனத்தை இரட்சிப்பதற்கு
க் காரணமாயிருந்ததுபோல இவர்களும்
இந்தச் சனங்களின் இகபரபாக்கியத்துக்
கு உதவிக்காறராகவிருந்தார்கள். இப்படி
ப்பட்ட நற்குணசாலிகளை இத்தேசத்தாரு
க்குள்ளுந் தேவன் எழுப்புவாராக.

௰உ. இலெய்சா எக்கினு அம்மா—Miss
Eliza Agnew.

இவ கூவாங்கூம் ஷூ. முற்கூற்றில் உ

டுவிற் பெண்பிள்ளைப் பள்ளிக்கூடத்துக்கு இஸ்போல்டிங் அம்மாவுடன் ஒத்தாசைகாறியாகவந்தா. இஸ்போல்டிங் அம்மா தமது பள்ளிக்கூடவிசாரணைகளிற் சில வற்றை அவ கையில் ஒப்புவிக்கலாமென்றுந் தனக்கு ஆறுதலென்றும் நினைத்ததுமன்றி ஒருமாதாவிடந் தூரதேசத்திலிருந்த மகள் ஒருத்தி வந்து சேர்ந்ததுபோலவும் பாவித்துக்கொண்டா. இந்த அம்மாள் வந்த பிறகு பிள்ளைகளுக்கு அதிக இங்கிலீசுக்கல்வித்தேற்றமும் வேதவாக்கிய அறிவுத்தேற்றமுந் தையல்வேலைத்தேற்றமும் வீட்டிற்பழக்கமுஞ் சுறுசுறுப்பும் வந்தன. ஐயரும் அம்மாவும் அமரிக்காவுக்குப் போயிருந்தகாலத்தில் இவவும் நயில்சுப்பிரசங்கியாரும், கோமர் உவாத்தியாரும் உவிற்றில்சி ஐயரும் அம்மாளும் பள்ளிக்கூடம்படிப்பிக்கிற உவாத்திமாராயிருந்தார்கள். இப்போ இலாய்சா எக்குனு அம்மா பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கிறதுமன்றி இஸ்போல்டிங் அம்மா அவர்களுடன் அப்பள்ளிக்கூடத்தை நடத்திவருகிறு. அவவைப் பெண்பிள்ளைகளின் நன்மைப்பேற்றுக்காகத் தேவன் சுகத்துடன் காப்பாற்ற அதிகமதிகமாய்ப் பிராத்தித்துக்கொள்வோமாக.

## ௰௬. சிமித் ஐயர்— Rev. J. C. Smith.

இவர் ௲௮௱௩௰௨ ம் ஆண்டு சித்திரை மாதம் யாழ்ப்பாணம்வந்து சேர்ந்து மானிப்பாயில் முதன்முதல் வாசம்பண்ணினர். இவருடைய அருமையான மனைவி யாழ்ப்பாணம்வந்து சிறிதுகிழமையாகமாத்திரமிருந்து சமுத்திரப்பிரயாணமாய் வரும்போதேயிருந்த துன்பத்தினலே ௲௮௱௩௰௨ம் ஆண்டு வைகாசி மாதம் ௬௨. காலஞ்சென்றுவிட்டார். ௲௮௱௩௰௬ ம் ௵. ஐப்பசி ௴. ௰௬௨. இரண்டாம்முறை இஸ்றீல் அம்மாவைவிவாகம்பண்ணினர். இவர் ௲௮௱௩௰௪ ம் ஆண்டு சாவுகச்சேரிக்குப்போய் அவ்வருடத்தில்தானே அவ்விடத்தைவிட்டு வரணிக்குப்போய் அவ்விடத்தில் ௲௮௱௩௰௫ ம் ஆண்டு சித்திரை மாதம் வரைக்குந் தமது குருவுத்தியோகத்தை நடத்திப் பின்பு அவ்வாண்டில்தானே பண்டத்தெருப்புக்குவந்து தமது குருவுத்தியோகத்தை நடத்துவதுடனே மிசியோன் பணப்போக்கிஷகாறனுகவுமிருந்தார். பின் தமதுபிள்ளைகளை அமரிக்காவக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டியபடியால் ௲௮௱௫௰௬ ம் ஆண்டு புரட்டாதி மாதம் ௰௭௨. அவ்விடம்போய்

மறுபடியும் ௲௮௱௩௰ம் ஆண்டு சித்திரை மாதம் ௨௯௨. தேவகிருபையால் சிர்தாத்திரையாய் அவரும் அம்மாளும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து உடுப்பிட்டிச்சேகரத்திலிருந்து தமது குருவுத்தியோகத்தை நடத்திச் சைவசமயத்திலே முதிர்ந்த அந்த ஊர்ப்பகுதியில் அதிக முயற்சியாய் வேதபோதகஞ்செய்துவருகிருர். அது சித்தியாக நாம் தேவனைப் பிரார்த்தித்துக்கொள்வோமாக.

## ௰ச. உவிற்றில்சி ஐயர்—Rev. Samuel G. Whittlesey.

இவர் ௲௮௱௩௰௨ம் ஆண்டு சித்திரை மாதம் சிமித் ஐயருடனே யாழ்ப்பாணம் வந்து மானிப்பாயிற் சிறிதுநாளிருந்து பின்பு ௲௮௱௩௰௨ம் ஆண்டு ஆவணி மாதம் சாவகச்சேரிக்குக் குருவாகப்போய் அங்கிருந்து இஸ்போல்டிங் அம்மாவும் ஐயரும் அமரிக்காவுக்குப்போக இவர் ௲௮௱௩௰௩ம் ஆண்டு ஐப்பசி மாதம் உடுவிலிற் பள்ளிக்கூடத்துக்குத் தலைவராகவந்து இஸபோல்டிங் ஐயர் மறுபடியும் அமரிக்காவைவிட்டு உடுவிலுக்கு வந்து சேர்ந்தவுடன் இவர் வட்டுக்கோட்டைக்கு ௲௮௱௩௰௪ம் ஆண்டு சித்

திரை மாதம் கூஉ. சேர்ந்து அங்கே சாத்தி ரப்பள்ளிக்கூடத்திற் சிறிதுகாலமிருந்து சுக ம்போதாதினால் ௲அ௱௬ளஎ ம் ஆண்டு மாசி மாதம் தமது சுகத்துக்காக மதுரைக்குப் போய் அவ்விடத்திற் சுகங்காணுமல் தே ண்டிக்கல் என்ற இடத்திலே சேர்ந்து சந் தோஷமான மரணமடைந்தார்.

யரு. கவுலன் ஐயர்—Rev. W. W. Howland.

இவர் ௲அ௱௬கூ ம் ஆண்டு பங்குனி மா தம் யாழ்ப்பாணம்வந்து சேர்ந்து வட்டுக் கோட்டையில் திருச்சபையையும் பள்ளி க்கூடங்களையுந் தீவுபற்றிலுள்ள பள்ளிக்கூ டங்களையும் சபையாரையும்பராபரித்துவ ந்தார். பின்பு ௲அ௲௬சஅ ம் ஆண்டு தை மாத ம் உடுவிலுக்குப்போய் அங்கே சிறிதுகா லமிருந்து மறுபடியும் வட்டுக்கோட்டைக் கு வந்து தமது குருவுத்தியோகத்தை நடத் திவருகையில் தமது அருமையான பிள்ளை களை அமரிக்காவிற்குப் படிப்பிக்கவிடவுந் தமது சுகத்துக்காகவும் ௲அ௱ருஎ ம் ஆண் டு பங்குனி மாதம் அங்கே போய் மறுபடி யுந் தேவகிருபையால் ௲அ௱கூஉ ம் ஆண்டு ஐப்பசி மாதம் யகூஉ. வட்டுக்கோட்டைக்

துவந்து தமது சூருவுத்தியோகத்தை நடத்திவருகிறார் வட்டுக்கோட்டையிற் திருச்சபை பெரிதானதினாலும் தீவுபற்றிற் கவ்வைகாரியங்களைப் பராபரிப்பது பிறையாசமானதினாலும் வேதானுசாரகல்லூரியை விசாரிப்பதினாலும் அவருடைய பிரயாசம் இருமடி மும்மடியான பாரதூரமாயிருக்கிறது. அவருடைய வேதனுசார பள்ளிக்குப் பிரதான உதவிக்காரன் இருய்சு ஆறுமுகம் என்பவர் உவாத்தியாரே. இந்த வேதானுசார பள்ளி வரவர அதிக தேற்றங்கொள்ளுகிறது. இதிலிருந்து பலரும் உவாத்திமாரும் உபதேசிகளுமாக வருகிறது சந்தோஷமானகாரியம்.

௰௬. கேசிற்றிங் ஐயர்—Rev. E. P. Hastings.

இவர் ௲அ௱௩௰ ஆண்டு பங்குனி மாதம் யாழ்ப்பாணம் வந்து வட்டுக்கோட்டையிலே கோய்சிங்றன் ஐயருடன் உதவித்தலைவராகச் சாத்திரப்பள்ளியிற் படிப்பித்துப் பின்பு கோய்சிங்றன் ஐயர் போனபிறகு தாம் தானே அவ் வித்தியாசாலையை ௲அ௱௫௰ ஆண்டளவும் நடத்திப் பின்பு அவ்வருடத்தின் கார்த்திகை மாதம் ௬௨.

அமரிக்காவுக்குப்போய் விவாகம்பண்ணி ௲அ௱ருஈ௩ம் ஆண்டு ஐப்பசி மாதம் ௰௬௨ வட்டுக்கோட்டைக்கு வந்து ௲அ௱ரு௩ம் ஆண்டளவுஞ் சாத்திரப்பள்ளிக்கூடத்தைப் படிப்பித்துப் பின்பு அவ்வித்தியாசாலை நிறுத்தப்பட்ட படியினாலே அவ்வருஷம் ஐப்பசி மாதம் ஈங் தேதிசாவுகச்சேரிக்குப் போய் ௲அ௱ருஎம் ஆண்டு ஐப்பசிமாதம் ௰௫ ங் தேதி மானிப்பாய்க்குப் போய் அவ்விடத்திற் குருவுத்தியோகத்தை நடத்தி வருவதுமன்றி மிசியோனின் இலிகிதனும் போக்கிஷகாறனுமாகவிருக்கிறார். இப்படிப்பட்ட பாரமான வேலைகளைத் தளம்பாமல் நடத்திவர அவருக்குச் சுகத்தையும் பெலனையும் பொறுமையையும் விடாமுயற்சியையுந் தேவன் கட்டளையிட்டிருப்பதற்காகக் கத்தருக்கு ஸ்தோத்திரம்.

௰எ கிறீன் பண்டிதர்—S. F. Green, Esq. M. D.

இவர் ௲அ௱௫௭ம் ஆண்டு ஐப்பசி மாதம் வட்டுக்கோட்டைக்கு வந்து அங்கே சிறிதுகாலமாகத் தமது வயித்தியத்தொழிலை நடத்திப் பின்பு ௲அ௱௫அம் ஆண்டு மாசி மாதம் க௳. மானிப்பாய்க்குப்போய்ப் பி

ன்பு ௲அ௱௫௰ம் ஆண்டு ஐப்பசி மாதம் ௨௬௨ வட்டுக்கோட்டைக்கு வந்து அங்கே சிறிதுவருடக்காலமிருந்து பின்பு ௲அ௱௫௰ம் ஆண்டு ஐப்பசி மாதம் ௫௨ அமரிக்காவுக்குப்போய் விவாகசம்பந்தம்பண்ணி ௲அசு௨ ம் ஆண்டு அப்பசி மாதம் ௰௬௨. தமது பாரியுடனே யாழ்ப்பாணம்வந்து மானிப்பாய்வாசராகி வயித்தியசாத்திரபண்டிதனுகவும் யாழ்ப்பாணம் ஆபத்துச்சங்கத்தாருடைய வயித்தியசாலைக்கு மேல்விசாரணைக்காறனுகவுஞ் சில மாணுக்கருக்கு வயித்தியசாத்திரம்படிப்பித்துவருகிற ஆசிரியராகவும் இருக்கிறுர். இவரிடத்தில் வயித்தியங்கற்ற பலரும் ஊருக்கூர் வயித்தியராகி நன்மைசெய்துவருகிறது சந்தோஷமானகாரியம். அவர்களிற் பட்டினத்தில் வயித்தியசாலையை நடத்தும் இடன்போது பெரியதம்பி வயித்தியர்மேலும் நல்லதம்பிவயித்தியர் பாக்கர்வயித்தியர் முதலானவர்களில் அவரிடங்கற்ற விவேகத்தையும் பொறுமைபட்சத்தையுங் காண்க அன்றியுங் கிறீன் வயித்தியர் கற்றுக்கொண்ட நுட்பமான தமிழ்ச்சொற்கள் அவர் இங்கிலீசிலிருந்து மொழிபேர்த்த வாகடசாத்திரங்களும் விளக்கும் அந்நூல்கள் இங்கிலிசுப்

பாஷையை அறியாத மாணுக்கர் கற்றுக்கொள்வதற்கு மகா உபயோகமுளள்ளவைகள். இவர் சரீரபிணிகளுக்கு வயித்தியராக மாத்திரமல்ல ஆத்தும பிணிபிடித்த மனிதரைப் பரமவயித்தியரிடம் வழிகாட்டுகிறவராகவுமிருக்கிருர்.

௰௪. வேணல் ஐயர்—Rev. T.S. Burnell.

இவர் ௲௮௱௩௰௨ம் ஆண்டு பங்குனி மாதம் யாழ்ப்பாணம்வந்து மானிப்பாயில் அச்சுக்கூடத்தலைவராகச் சில வருடமிருந்து பின்பு குருப்பட்டம்பெற்று மதுரைக்குக் குருவாகப்போனுர். இவருடைய இடத்துக்கு இடேலீ என்பவரும் இஸ்ரேங்கு என்பவருந் தங்கள் பொறுப்பில் அச்சுக்கூடத்தையேற்றுப் பராபரிப்புக் காரராணுர்கள். அச்சுக்கூடம் நன்ருய்த்தழைத்துவருகிறது.

௰௫. சாந்தர்ஸ்ஜயர்—Rev. M.D. Sanders.

இவர் ௲௮௱௪௰௨ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து சாவுகச்சேரியிலுந் தெல்லிப்பழையிலும் வட்டுக்கோட்டையிலும் அங்கங்கே சிறிதுவருடக்காலமாகத் தமது குருவுத்தியோகத்தை நடத்திவந்ததுமன்றி வட்டுக்கோட்டையிலே சாத்திரப்பள்ளி நி

ஞத்தப்பட்டபின்பு வேதானுசாரக் கல்லூ
ரி ஒன்று ஏற்படுத்திப் பிள்ளைகள் உவாத்தி
மார் உபதேசிமாராகும்பொருட்டுப் படிப்
பித்துவந்தார். பின்பு கூஅகூச ம் ஆண்டு
மார்கழி மாதம் இத்தேசத்தை விட்டு அம
ரிக்காவுக்குத் தமது பாரியுடனேயும் பிள்
ளைகளோடும் போயிருக்கிறூர். இவர் இவ்
விடத்தில் மிசியோனைப்பற்றி நடத்திவந்த
வேலைகள் மகா முக்கியமானவைகளாயி
ருந்தன. இவர் போய்விட்டது மிசியோ
னுக்குப் பெரிய உதவித்தாழ்ச்சி. அவரை
க் கருத்தர் ஆசீர்வதித்து மறுபடியும் இத்
தேசத்தாருக்கு நன்மைசெய்ய வரும்படி
கிருபைசெய்வாராக.

யகூ. லோட்டையர்—Rev. N. L. Lord.

இவர் கூஅஙாடுகூ ம் ஆண்டு யாழ்ப்பாண
ம் வந்து உடுப்பிட்டிச்சேகரத்திலும் மறு இ
டங்களிலும் குருவாக இருந்து பின்பு அம
ரிக்காவுக்குப் போய் அங்கே சிறிதுகாலமி
ருந்து மறுபடியும் மதுரைக்குக்குருவாகவு
ம் வயித்தியராகவும் வந்திருக்கிறூர்.

உ௦. குவிக்கையர்—Rev. J. Quick.

இவர் கூஅஙாடுஅ ம் ஆண்டு யாழ்ப்பாண

ம் வந்து சேர்ந்து வட்டுக்கோட்டையிற் சிறி துகாலந் தமது குருவுத்தியோகத்தை நடத் திப் பின்பு கஅசுஙய ம் ஆண்டு பங்குனி மா தம் யஎந் தேதிபண்டத்தெருப்புக்குப்போ ய் அவ்விடததிலுந் தெல்லிப்பழையிலுந் தமது குருவுததியோகததை முயற்சியாய் ந டததிவருகிறார். கடசியாக வந்த குருமாரி லிவர் ஒருவர், இவரைக் கருததர் ஆசீர்வதி தது இனிவருங் குருமாருக்குப் பிதாப்போ ல இருக்கப்பண்ணுவாராக.

Summary account. யாழ்ப்பாணத்து க்குக் குருமாராகவும் வயித்தியராகவும் அ ச்சியந்திரத் தலைவராகவும் முப்பத்துநாலு புருஷரும் முப்பத்தாறு இஸ்திறிகளும் மிஷனரிமாராக வந்தார்கள். முழுத்தொ கை எகூ இவர்களில் யகூ பேர் யாழ்ப்பா ணத்திலும் எ பேர் வடதேசத்திலும் இன் னும் கூ பேர் மறுஇடங்களிலுமாக உகூ பேர் மரிததுவிட்டார்கள். கூகூ பேர் தங்க ள் தேசததுக்குப்போய்விட்டார்கள். மற்ற யஎ பேரில் குருமாரும் அம்மாமாருமாக யகூ பேர் யாழ்ப்பாணததிலே சுவிசேஷஊ ழியததை நடப்பிததுக்கொண்டு வருகிறார்.

உக. பிரதிகாரியஸ்தர்கள்--Deputation.

இவர்கள் இருவர் அமரிக்கன் போட்ச

ங்கத்தாரால் அனுப்பப்பட்டு ௲௮௱௭௰ ஆம் ஆண்டு சித்திரை ௨௨. யாழ்ப்பாணம் வந்து அமரிக்கன் குருமார் ௬௰ வருஷக்காலமாக யாழ்ப்பாணத்தில் நடத்தின கிறிஸ்து மார்க்கப்பிரபலகாரியங்களை ஆராய்வுபண்ணவும் பார்க்கவும் அங்கங்கே மிசியோன் சேகரங்களுக்குப்போய்ச் சனங்களின் கல்வித்தேற்றத்தையுஞ் சீர்திருத்தத்தையும் மார்க்கவிருத்தியையுங் கண்குளிரப்பார்த்துங் காதுகள் தேங்கக் கேட்டும் அந்தந்தச் சபைகளுக்குச் சாதுரியமான பிரசங்கங்களைப் பிரசங்கித்துஞ் சபைகளைக் கண்டுஞ் சந்தோஷப்பட்டுத் தங்கள் சங்கத்தார் அமரிக்காவிலிருந்து குருமாரையும் பணங்களையும் அனுப்பினது வீணல்லவென்று அறிந்து கம்பீரத்துடன் கிறிஸ்துநாதருக்குத் துதிசெலுத்திக் காலேப்பும் யோசுவாவுங் கானான்தேசத்தை வேவுபார்த்து அது நல்லதேசமேன்று விதந்து சொன்னதுபோல யாழ்ப்பாணத்தைப் பற்றிச் சில குறைவுகளிருந்தும் பெரும்பாலும நற் செய்தி கொண்டு தங்கள் தேசம் போய்ச் சேர்ந்தார்கள். இவர்களையும் போட் சங்கத்தாரையும் மேன் மேலும் கடவுள் ஆசீர்வதிப்பாராக.

முதற்பங்கு முற்றும்.

PITTS THEOLOGY LIBRARY
EMORY UNIVERSITY
300000433019

